## விசார சங்க்ரஹம்



கம்பீரம் சேஷையர் என்பவர் ஒரு ராம பக்தர். 1900 ஆண்டு வாக்கில் ஸ்ரீ ரமண பகவான் விரூபாக்ஷி குகையில் வசித்த காலத்தில் பகவானிடம் வரலானார். அது முதல் பகவானின் எளிய தொண்டனாய் தன்னைக் கருதிக்கொண்டு குகையை துப்புரவாக வைத்துக் கொள்வது முதல் பல தொண்டுகளை செய்து வந்தார். அவருக்கு ராஜ யோகம் போன்றவற்றில் ஈடுபாடு உண்டு. ராஜ/ஞான யோகங்கள் பற்றி ஸ்வாமி விவேகானந்தர் நிகழ்த்திய உரைகளை படித்துவந்தார். அதில் எழும் சந்தேகங்களை பகவானிடம் காட்டி நிவர்த்தி செய்து கொள்வதுண்டு. அவை ஆங்கிலத்தில் இருக்கும். அம்மொழியில் புலமை அதிகம் இல்லாததால் தமக்கு தெரிந்த தமிழ் மொழியில் புரிந்து கொள்ள பகவானை தமிழில் அந்த உபதேசங்களை எழுதித்தர வேண்டினார். பகவானும் சமாதியில் இல்லாத போது அவ்வாறே துண்டு காகிதங்களில் எழுதிக்கொடுத்தார். இப்படி இரண்டு ஆண்டுகள் சேகரித்தவை ஒரு நோட்டுப்புத்தகமாக உருவாயிற்று. பின்னால் இது சிலரால் பகவான் சந்நிதியிலேயே தொகுக்கப்பட்டு "விசார சங்கிரஹ வினா விடை" என்று பிரசுரிக்கப்பட்டது.

இது இப்போது நமக்கு பயனாகக்கூடுமோ என்று தட்டச்சு செய்யலானேன். மொழி நடை நமக்கு இப்போது பரிச்சயமில்லாதது. ஞான காண்டம் படித்தவர்களுக்கு மட்டுமே இது பயனாகும். ஆகவே கூடவே எளிய மொழியில் விளக்கங்கள் தேவையாக இருக்கிறது. வாரம் இரண்டோ மூன்றோ பதிவுகளாக வெளியாகும்.

## விசார சங்கிரகம்-1

ஓம்
விசார சங்கிரகம்

1. ஸ்வாமி எப்போதும் துக்கமற்ற நித்யானந்த நிலை எய்துதற்குரிய உபாயம் யாது?

எங்கெங்கே சரீரம் உள்ளதோ அங்கங்கே துக்கம் உள்ளது என வேதத்திற் கூறியுள்ளதன்றி எல்லோர்க்கும் பொதுவான பிரத்யக்ஷ அனுபவமாவிருத்தலான் எப்போதும் சரீரமில்லாத தனது யதார்த்த சொரூபம் இன்னது என்று விசாரித்துணர்ந்து உள்ளவாறிருத்தலே அந்நிலை எய்துதற்கு உரிய உபாயம்.

எங்கே சரீரம் இருக்கோ அங்கே துக்கம் உள்ளதுன்னு வேதத்தில் சொல்லி இருக்கு. இது எல்லோர்க்கும் பொதுவான பிரத்யக்ஷ அனுபவமாகவும் இருக்கு. அதானல எப்போதும் சரீரமில்லாத தனது உண்மையான - யதார்த்த சொரூபம் இன்னதுன்னு விசாரித்து உணர்ந்து அது உள்ளபடி இருத்தலே அந்நிலை எய்துதற்கு உரிய உபாயம்.

2. தனது யதார்த்த சொரூபத்தை விசாரித்துணர்வது என்றால் என்ன?

எல்லோர்க்கும் சுபாவமாக உண்டாகும் போனேன் வந்தேன் இருந்தேன் செய்தேன் என்பதாகிய அநுபவங்களில் இருந்தே அவ்வநுபவ நிகழ்ச்சிக்குரிய வினைகளுக்கு முதலாக நான் என்றதோர் போதம் (நினைப்பு) தோற்றுகிறதல்லவா? அந்த போதத்தின்

உண்மை வடிவை (நான் யார் என்ற விசாரத்தால்) விசாரித்து தானாயிருப்பதே தனது யதார்த்த சொரூபத்தை விசாரித்து உணர்வது என்பதாம்.

நான் போனேன், வந்தேன், இருந்தேன், செய்தேன் என்பதாகிய அநுபவங்கள் எல்லோர்க்கும் சுபாவமாக உண்டாகும். இதில் இருந்தே அவ்வநுபவ நிகழ்ச்சிக்கு உரிய செயல்களுக்கு முதலாக 'நான்' என்ற ஒரு நினைப்பு தோற்றுகிறது இல்லையா? அந்த ஞானத்தின் உண்மை வடிவை (நான் யார் என்ற விசாரத்தால்) விசாரித்து தானாயிருப்பதே தனது யதார்த்த சொரூபத்தை விசாரித்து உணர்வது என்பதாம்.

விசார சங்கிரகம்-2

3. நான் யார் என்று விசாரிப்பது எப்படி?
போதல் வருதல் ஆதிய தொழில்கள் தேகத்தினவே யன்றி வேறின்மையால் தேகமே நானென்று சொல்வதாக அன்றோ தெரிகிறது? பிறத்தற்கு முன் தேகம் இன்மையாலும் பஞ்ச பூதாத்மகம் (பஞ்ச பூதங்களால் ஆனது) ஆதலானும் சுழுத்ததியில் அபாவம் (இல்லை) ஆதலானும் பிணமாக போதலானும் அதை நான் என்னும் போதமாக சொல்லுதல் கூடுமா? கட்டையை போன்ற ஜட பதார்த்தம் ஆகிய இச்சரீரம் நான் தான் என்று ஸ்புரித்து வழங்கி வருமா? இப்படி அவாந்தரமாகத் தேகத்தை குறித்து நான் என்று எழும் போதமே தற்போதம் என்றும் அகங்காரம் என்றும் அவித்தை என்றும் மாயை என்றும் மலம் என்றும் ஜீவன் என்றும் பலவிதமாகச் சொல்லப்படுகிறது. இதைப்பற்றி விசாரியாது இருக்கலாமா?விசாரித்து உணர்ந்து உய்தற்கன்றோ சகல சாஸ்திரங்களும் ஏற்பட்டு அத்தற்போத நாசமே முக்தி என்று கோஷிக்கின்றன. ஆகவே பிணமான தேகத்தை பிணம் என்றே இருத்தி வாக்கினாலும் நானென்று சொல்லாமல் இருந்து இப்போது நான் என்று எழுவது எது என கூர்மையாய் விசாரித்தால் அப்போது ஹ்ருதயத்தில் 'நான் நான்' என்னும் சப்தமில்லாமல் ஓர் வித ஸ்புரிப்பு அதாவது கண்டமாயும் (துண்டாகவும்) நாநா வாகவும் இருந்த நினைவுகள் போய் அகண்டமாகவும் ஏகமாகவும் (ஒன்றாகவும்) ஞெப்தி மாத்திரம் தனக்குத்தானே தோற்றிக்கொண்டு இருக்கும். அதனை விடாமல் சும்மாவிருந்தால் தேகம் நானென்னும் அகங்கார ரூப ஜீவ போதத்தை முற்றிரும் நாசப்படுத்தி கர்ப்பூரத்தில் பற்றிய நெருப்பு போல் முடிவில் தானும் சாந்தமாய் விடும். இதுவே மோக்ஷம் என்று பெரியோர்களாலும் சுருதிகளாலும் சொல்லப்படுகிறது.
==
சர்வ சகஜமா நான் போனேன் நான் வந்தேன் ந்னு சொல்கிறோம். போனதும் வந்ததும் யார்? உடம்பே போச்சு வந்தது.
நாம் பிறக்கும் முன்னாலே இந்த உடம்பு இல்லை. பஞ்ச பூதங்களால ஆக்கப்பட்டு வந்தது. ஆனால் வந்த பிறகும் ஆழ் உறக்கத்திலே அது உணரப்படலை.
அப்புறமா ஏதோ ஒரு நாள் அது இருக்கும் போதே நான் இல்லைம்பாங்க; இறந்து போயிட்டதா சொல்வாங்க. ஏன்னு கேட்டா இதில உயிர் இல்லை; இது ஜடம்பாங்க. அதனால இந்த உடம்பை 'நான்' ந்னு சொல்வது அறிவுடமையா இல்லை. இருந்தாலும் உடம்பை நான்ன்னு சொல்கிறோம். தேகம் நான் என்கிற இந்த நினைப்பே தற்போதம். இதுவே அஞ்ஞானம். இந்த அநியாயமான அஞ்ஞானத்தை விசாரிக்கணும். இதுக்கு உதவத்தான் எல்லா சாஸ்திரங்களும் இருக்கின்றன. அவை எல்லாம் சொல்லுவது என்ன? "இந்த தப்பான நினைப்பு போகிறதுதான் முக்தி" என்பதே. அதனால பிணமாக போகப்போகிற இந்த உடம்பை பிணமாகவே நினைச்சு இதை நான்னு சொல்கிறதை விட்டுவிட்டு, இப்ப யாரப்பா அந்த நான் ந்னு கூர்மையா கவனிச்சா உள்ளுக்குள்ள ஏதோ ஒண்ணு நான் ந்னு இருக்கும். இப்படி தோணும் போது மத்த சாதாரணமா இருக்கிற பல நினைப்புகளும் இரா. இதையே விடாம பிடிச்சுக்க முடிஞ்சா போதும்; வேற ஒண்ணும் செய்யாம சும்மா இருந்தா ஒரு உருவத்தை நான் ந்னு நினைச்சது போயே போய்விடும். அதுக்கப்புறம் எப்படி கர்ப்பூரத்தில் ஜ்வாலை எரிந்து அப்புறம் சாந்தமாய் ஆகுமோ அப்படி இதுவும் சாந்தமாகிடும். இந்த நிலையே மோக்ஷமாம்.
--------------

4. அகம் வடிவ தற்போதத்தின் மூலத்தை விசாரிக்க அங்கு வேறு எதேதோ வெவ்வேறெண்ணங்கள் கணக்கற்றனவாய்த் தோற்றிக்கொண்டு இருக்கின்றனவே அன்றி நானென்றதோர் தனி நினைவு தோன்றவில்லையே?

எழுவாயாகிய முதல் வேற்றுமை தோன்றினாலும் தோன்றாவிட்டாலும் மற்ற வேற்றுமைகளில் வரும் வாக்கியங்கள் அனைத்தும் முதல் வேற்றுமையை ஆச்ரயித்தே (சார்ந்தே) விளங்கல் போன்று ஹ்ருதயத்தில் தோன்றும் நினைவுகள் அனைத்தும் தேகோகம் (தேஹம் அஹம்- நானே தேகம்) புத்தி வடிவ நானென்னும் முதல் விருத்தியாகிய அகங்காரத்தை ஆச்ரயித்தே விளங்கலானும் அகங்காரத்தின் எழுச்சியே மற்ற எல்லா நினைவுகளின் எழுச்சிக்கு காரணமாகவும் மூலமாகவும் இருத்தலானும் சம்சாரம் என்னும் மாயா விருக்ஷத்தின் வேராகிய அகங்கார ரூப தற்போதத்தை நாசமாக்கின் மற்றெல்லா நினைவுகளும் வேரற்ற விருக்ஷம் போல் அடியோடு நாசமாகும். தான் செய்யும் நிஷ்டைக்கு பிரதிபந்தமாக எத்தனை நினைவுகள் தோன்றினாலும் மனதை அவ்வழியே செல்லவொட்டாமல் ஆன்ம சொரூபமாகிய தன்னிடத்திலேயே இருத்தி நம் முன்னே என்னென்ன விசித்திரங்கள் நடக்கின்றன? நடப்பது நடக்கட்டும் பார்க்கலாம் என்று சாக்ஷியைப்போல விலக்ஷணமாய் பார்த்துக் கொண்டிருக்கப்பழகுவதே. அதாவது தோற்றங்கள் மயமாகாது தன்னை விடாமல் இருப்பதே முன் கூறிய பிரதி பந்தங்களுக்கெல்லாம் மூலமான தேகாத்ம புத்தி ரூப மனோ நாசத்துக்கான தக்க உபாயமாம். இலகுவாக கெடுக்கத்தகும் இம் மார்க்கமே பக்தி என்றும் தியானமென்றும் யோகமென்றும் ஞானமென்றும் கூறத்தகும். ஹ்ருதயத்தில் உள்ள அஹம் சொரூபமான ஆத்மாகாரமாகவே கடவுள் இருப்பதாலும் நினைப்பு மாத்திரமே பந்தம் என்று சுருதிகள் முறையிடுவதாலும் எப்படியேனும் நான் என்னும் நினைவு ரூபமான மனதை அவரிடத்திலே இருத்திவிட்டு எப்போதும் அவரை மறவாது சும்மா இருத்தலே சிரேஷ்டமான சாதனம். இதுவே சுருதிகளின் முடிவான சித்தாந்தம்.

-----

சரி, நான் யார் ன்னு விசாரத்துல உக்காந்தா வேற ஏதேதோ எண்ணங்கள் கணக்கில்லாம வருதே ஒழிய நான்ன்னு தனியா ஒண்ணும் தோணலையே?
இங்க வா, இதைப்பண்ணு, உனக்கு எடுத்துக்கன்னு எப்படி சொன்னாலும் ஒரு விஷயம் மறைஞ்சு இருக்கு இல்லியா? ஹே ராமா, இங்க வா, இதைப்பண்ணு, உனக்கு எடுத்துக்கன்னு சொல்லுவதில்லை. அது அன்டர்ஸ்டுட். அது போல மனசில வர எண்ணங்கள் எல்லாமே நான் என்கிற புத்தியோட ஒரு நிலைப்பாட்டை அடிப்படையா வெச்சே பிறக்குது. அதுவும் அன்டர்ஸ்டுட். இதுக்குத்தான் அகங்காரம் ந்னு பேர். இந்த உலகம் இந்த என்னை எப்படி பாதிக்கும் என்பதை வெச்சே மற்ற எண்ணங்கள். எனக்கு பிடிக்கும். எனக்கு கஷ்டம், எனக்கு சந்தோஷம் நான் சொல்கிறேன்னு எல்லா எண்ணங்களுமே! இந்த நான் என்கிற நினைப்பு இல்லாம போனா? வேரை வெட்டிப்போட்ட மரம் வாடுகிறதைப்போல மத்த எண்ணங்களுமே வாடி அழியும். நாம கவனிக்கிற விஷயத்துக்கு பாதகமா எத்தனை எண்ணங்கள் வந்தாலும் மனசை அதுல செலுத்தாம உள்ளுக்குள்ள தெரிஞ்ச தன்னிலேயே நிறுத்தி மத்தபடி நம்ம முன்னே என்னவெல்லாம் நாடகம் நடக்குது, நடப்பது நடக்கட்டும் என்கிற ரீதியில பாக்க ஆரம்பிக்கணும்.
அதாவது என்னென்ன எதிரே நடந்தாலும் அதிலே முழுகிடாம உள்ளுக்குள்ள இருக்கிற தன்னோட தொடர்பு விடாம இருக்கணும். இப்படி செய்யறதே மனசு ஓர் உருவத்தை தான் ந்னு உருவகப்படுத்தி கொண்டு இருக்கிறதை நாசம் செய்ய வழி. இதையே பக்தி, தியானம். யோகம், ஞானம் ந்னு பலவிதமா சொல்லிக்கலாம். ஹ்ருதயத்தில் நான்னு இருக்கிறது ஆத்மா, இந்த ஆத்மாவா இருக்கிறதேதான் கடவுளும். இதை உணர விடாம தடுக்கிறதே நம் மனசில் எழுகிற நினைவுகள்தான். நம்மால மனசு இல்லாம இருக்க முடியலை என்கிறதால அந்த மனசை எப்படியாவது கடவுள்கிட்டேயே செலுத்தி எப்பவும் மறக்காம சும்மாயிருக்கிறதே நல்லது. வேதங்கள் முடிவா சொல்கிறது இதுவே.

## விசார சங்க்ரஹம் 3

5. விசாரம் ஸ்தூல தேகத்திலுள்ள ஆன்ம பாவத்தை மாத்திரம் நீக்குதற்கு சாதனமா? சூக்கும காரண தேகங்களிலுள்ள ஆன்ம பாவங்களை நீக்குதற்கும் சாதனமா?

ஸ்தூல தேகத்தை பற்றியே மற்ற தேகங்கள் ஜீவித்திருப்பதாலும் தேகம் நான் என்பதில் பஞ்ச கோச ரூபமான முத்தேகங்களுமே அடங்கிவிட்டதானும் ஸ்தூல தேகத்தில் உள்ள ஆன்ம பாவத்தின் அழிவே மற்ற தேகங்களின் அழிவாகலானும் விசாரம் மும்மை தேகங்களிலுமுள்ள ஆன்ம பாவங்களை போக்கற்கே சாதனமாகிறது.

விசாரம் செய்யச் சொல்லறீங்க. இதனால இந்த நாம பாக்கிற உடம்புலிருந்து நான் என்கிறதை நீக்குமா? இல்லை பாக்கமுடியாத உடம்புங்கன்னு சொல்கிறாங்களே - சூக்குமம், காரணம் ந்னு,- அந்த உடம்புகளிலிருந்தும் நான் என்கிற பாவனையை நீக்குமா?
நாம பாக்கிற உடம்பைத்தான் மத்ததும் பிடிச்சுக்கொண்டு இருக்கு. அதனால நாம பாக்கிற உடம்பிலிருந்து நான் என்கிற பாவத்தை நீக்கினா போதும். மத்ததிலிருந்தும் அது நீங்கிடும்.

6. விருத்தி பேதங்கள் மனம் புத்தி சித்தம் அகங்காரமெனப் பல விதங்களாயிருக்க மனோ நாசமே முக்தி என்பதெப்படி?

[மனசுன்னு மட்டுமில்லாம உள்ளத்தோட (அந்தக்கரணத்தோட) வெளிப்பாடு புத்தி, சித்தம், அகங்காரம் ந்னு பலவிதமா சொல்லறாங்களே, ஆனா ஏன் மனோநாசமே முக்தின்னு சொல்கிறாங்க?]

மனதின் தத்துவங்களை கூறும் சாஸ்திரங்களில் "நாம் புஜிக்கும் அன்னத்தின் சூக்ஷ்மபாகத்தால் கெட்டிப்பட்டு, இராக த்வேஷ காமாதிகளால் விருத்தி அடைந்து, மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்னும் சமுதாயமாய், மனமென்னும் பன்மை யொருமைப் பெயரையே பெற்றதாய், நினைத்தல், நிச்சயித்தலாதிய தருமங்களை யுடையதாய், ஞானத்தால் அறியப்பட்ட திருசியமாய், ஜடமாய், ஜடமாயினும் ஞானத்தின் சேர்க்கையால் (தப்தாய பிண்டம் போன்று) சேதனம் போலவே தோற்றுவதாய், பரிச்சின்னமாய், அநித்தியமாய், அவயவாகாரமாய், அரக்கு சுவர்ண மெழுகாதிகள் போன்று பரிணாமமுறுவதாய், சர்வ தத்வாதமகமாய், சக்ஷுரிந்திரியாதிகளுக்கு நேத்திராதி போல ஹ்ருதய கமலத்தை ஸ்தானமாகவுடையதாய்; ஜீவனுக்குபாதியாய்; தானொரு பொருளை நினைத்து விருத்தி ரூபமாய் மூளையிலுள்ள அறிவோடுங் கூடி பஞ்சேந்திரியங்களின் வழியாக அவ்விஷயங்களை (அறிவோடுங்கூடியுள்ள) மூளையாற் கூட்டிக்கொடுக்கப்பெற்று, அவ்விஷயங்களை யறிந்தனுபவித்து திருப்தியடைவதாய் விளங்கும் பதார்த்தம் எதுவோ அதுவே மனம்." என்று மனத்தின் சொரூபத்தை கூறியிருத்தலால் ஒருவனுக்கே வேலையில் வெவ்வேறு நாமம் வருவது போன்று மனமொன்றே விருத்தி பேதங்களை முன்னிட்டு மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்ற நாமங்களால் வழங்கப்படுகிறதேயன்றி வேறில்லை. இம்மனமே சர்வ தத்வாத்மக ஜீவேச்வர ஜகத் சொரூபமாயிருத்தலான் இது எப்போது ஞானத்தால் ஆன்மாகாரமாகுமோ அப்போதே எல்லாம் ப்ரஹ்ம சொரூபமாகிற கைவல்யமாகும் என்று சொல்லப்படுகிறது.

--

மனசைப்பத்தி சாஸ்திரங்களில எப்படி விவரிச்சு இருக்குன்னு பாத்தா இது விளங்கிடும். நாம சாப்பிடற உணவில கண்ணால பார்க்கக்கூடிய பாகம் ஜீரணமாகி சக்தி கொடுக்கும். பார்க்க முடியாத பாகம் மனசை பாதிக்கும்; எண்ணங்களை அதிகமாக்கும். பட்டினி கிடக்கும்போது எண்ணங்கள் அதிகமா வராது இல்லியா? (இதனாலதான் விரதங்களில சாப்பாட்டை குறைக்கச் சொல்லராங்க) இந்த மனசு ஆசை, கோபம் போன்ற குணங்களால

வளரும். இதுவேதான் மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்கிற கூட்டமாக பரிணாமமமாகும். அப்படி பலதா ஆனாலும் மனம் என்கிற ஒரே பொருள்தான் அது. இப்படி செய்யலாமா அப்படி செய்யலாமான்னு நினைக்கறதும், இப்படித்தான்னு நிச்சயம் பண்ணறதும் இதுதான். சாக்ஷி ஞானத்தாலே இது அறியப்படும். இது ஜடம்தான், ஆனாலும் எப்படி நெருப்பில காய்ச்சிய ஒரு இரும்பு துண்டுக்கு சூடு என்கிற அதோட இயற்கையா இல்லாத குணம் ஒண்ணு புதுசா இருக்கறாப்பல தெரியுமோ அது போல சாக்ஷி ஞானத்தோட சேர்கிறதால மனசு அறிவுள்ளதா தோணும். பின்புலத்தில சாக்ஷி ஞானம் இல்லாம மனசுக்கு அறிவு இல்லை. மேலும் மனசுங்கறது வரையறைக்கு உட்பட்டது (அதாவது அளவற்றது இல்லை). அதே மாதிரி மனசு அநித்தியம்; இப்ப இருக்கிற மனசு அப்புறம் அப்படியே இருக்கும்ன்னு சொல்ல முடியாது. மனசு அப்டீன்னு இப்பொ நாம சொல்லிண்டிருக்கற அந்தக்கரணம் மனம் புத்தி சித்தம் அகங்காரம் என்கிற எந்த அம்சத்தோட தன்மைகளை எப்ப காட்டுதோ அப்ப அந்த ரூபத்தை எடுத்துக்கும். அரக்கு, மெழுகு, தங்கம் முதலிய பொருள்கள் உருவம் மாறி பொம்மை, ஆபரணம் முதலிய பல விதமான பொருள்களா மாறுவது போல இதுவும் மாறும். (சர்வதத்வாத்கமாய்?) கண் காது முதலான உடல் உறுப்புகளுக்குள்ள நேத்திரம் சுரோத்திரம் முதலான இந்த்ரியங்கள், அதாவது பார்ப்பது கேட்பது முதலான சக்திகள் இருந்து செயல் படுத்தறதுபோல அந்த இந்த்ரியங்களுக்குள்ள இருந்து அதுகள செயல்படுத்தறது மனசு தான். ஹ்ருதயத்த இருப்பிடமா கொண்டு ஆழ்ந்த உறக்கத்துல அந்த எடத்துல ஒடுங்கிடறது. ஜீவனுக்கு உபாதியா இருக்கு. அதாவது அது ஒரு ஜீவனையும் இன்னோரு ஜீவனையும், ஜீவனையும் ஈச்வரனையும் பிரிக்கறது. அதாவது ஒரு ஜீவனுக்கும் இன்னோரு ஜீவனுக்கும் என்ன வேறுபாடுன்னா இவனுக்கு வேற மனசு அவனுக்கு வேற மனசுன்னு அத வெச்சு சொல்லலாம். அதே மாதிரி ஜீவனுக்கும் ஈச்வரனுக்கும் என்ன வித்தியாசம்னா ஜீவனுக்கு குறுகிய (ஒரு சில பொருள்களை மாத்திரம் அறியக்கூடிய) மனசு இருக்கு, ஈச்வரனுக்கோ உலகத்தையே வ்யாபிக்கக்கூடிய பெரிய்ய்ய மனசு. பௌதிக ரீதியில சொல்லப்போனா ஐம்புலன்கள் பொருள பாத்து மூளையிலே தெரிவிக்கும்போது அந்த மூளையோடு கூடி அந்த விஷய ரூபமா மாறி அனுபவிக்கறது. இப்படிப்பட்ட குணங்களை உடையது மனசு, அல்லது அந்தக்கரணம்.

இப்படி மனசைப்பத்தி சொல்லி இருக்கிறதாலே மனசுன்னு தனியா இல்லை. அதோட தொடர்புடையதுதான் புத்தி, சித்தம், அகங்காரம் எல்லாம். எப்படி ஒருத்தர் வீட்டிலே மனைவிக்கு கணவனாகவும், குழந்தைக்கு தகப்பனாகவும், அலுவலகத்திலே ஆபீசராவும், மேலதிகாரிக்கு சேவகனாகவும், கிளப்பிலே செயலாளராகவும் இருப்பாரோ அப்படியே மனசு இடத்துக்கு தகுந்த ரூபம் எடுக்குது. ஆகவே மனோ நாசம்ன்னா இந்த நாலுமே நாசம் அடையும். இந்த மனசேதான் எல்லா ஜீவன்-ஈஸ்வரன், ஜகத், தத்துவங்கள் முதலான எல்லா கற்பனைகளுக்கும் காரணம். அதனால மனம் ஆன்மாகாரம்- நாசமாகும் போது முக்தி கிடைத்ததாக பொருள்.

7.மனம் புத்தி சித்தம் அகங்காரமாகிய இந்நான்கும் ஒரு பொருளேயென்றால் இவைகளுக்குத் தனித்தனி ஸ்தானங்கள் கூறப்படுவதேன்?

மனத்திற்கு ஸ்தானம் கண்டமென்றும் புத்திக்கு முகம் அல்லது ஹ்ருதயமென்றும்; சித்தத்திற்கு நாபி என்றும்; அகங்காரத்திற்கு ஹ்ருதயம் அல்லது சர்வாங்கம் என்றும் பலவிதங்களாகக்கூறி இருந்தாலும், இவற்றின் சமஷ்டியாகிற மனமென்னும் அந்தக்கரணத்திற்கு ஹ்ருதயமே ஸ்தானம் என்று சுருதிகளில் முடிவாக கூறியிருக்கிறது. அது சரி, எல்லாம் ஒண்ணுதான்னா ஏன் தனித்தனியா இடம் சொல்லி இருக்கு?

நடைமுறையிலே பலதா சொன்னாலும் அந்தக்கரணத்தோட இடம் ஹ்ருதயம் ந்னு முடிவாக வேதத்திலே சொல்லி இருக்கு.

8.அகக்கரணமாவுள்ள மனமே ஜீவேச்வர ஜகத்ரூப சர்வதத்வாத்மனமாக விளங்குகிறது என்பது எவ்வாறு?

விஷயங்களையறிதற்கு சாதனமாய் இந்திரியங்கள் வெளியிலிருத்ததால் புறக்கரணம் என்றும் மனம் உள்ளிருத்ததால் அகக்கரணமென்றும் கூறப்பட்டாலும் தேகத்தை குறித்தே அகம் புறம் என்று சொல்லப்படுகிறதே அன்றி உண்மையில் உள் வெளி என்பதே இல்லை. ஆகாசத்தைப்போன்று ஸ்வச்சமாயிருத்தலே மனதின் சொரூபம். ஹ்ருதயமென்றும் மனமென்றும் சொல்லப்படுவது அந்தர்பஹிராய்த் தோன்றும் தத்துவங்களின் சேர்க்கையேயாம். ஆகவே சர்வ நாமரூபக்காட்சிகளும் மனோரூபமே என்பதில் சம்சயமில்லை. வெளியிற்றோன்றும் சகலமும் உள்ளேயே இருக்கிறதன்றி வெளியிலில்லை யென்பதை அறிவித்தற்கே வேதங்களிலும் எல்லாம் ஹ்ருதயாகாரமாகவே வர்ணிக்கப்பட்டிருக்கிறது. ஹ்ருதய மென்பது ப்ரஹ்மத்தை யன்றி வேறில்லை.

மனசு அகக்கரணம் இல்லையா? இந்த மனசேதான் வெளியே இருக்கிற எல்லா ஜீவன்- ஈஸ்வரன், ஜகத், தத்துவங்கள் முதலான எல்லாத்துக்கும் காரணம் ன்னு ஏன் சொல்லறீங்க?

நாம விஷயங்களை தெரிஞ்சுக்க உதவும் கண் முதலானது வெளியே இருக்கு என்கிறதால நாம் அதை எல்லாம் புறக்கரணம் ந்னும் மனசு உள்ளே இருக்கிறதாலே அகக்கரணம் ந்னும் சொல்கிறோம். இதை உடம்பை ஆதாரமா வெச்சு உள்ளே, வெளியேன்னு சொல்கிறோம். ஆனா உண்மையிலே உள்ளேன்னும் ஒண்ணுமில்லை, வெளியேன்னும் ஒண்ணுமில்லை. மனசு ஆகாசம் போல தெளிவா இருக்கு. ஹ்ருதயம் என்கிறதும் மனசு என்கிறதும் உள்ளே/வெளியே வா தோன்றுகிற எல்லாம்தான். அதேதான் பிரம்மம்.

## விசார சங்கிரகம்-4

9.ஹ்ருதயம் ப்ரஹ்மத்தை யன்றி வேறில்லை என்பது எப்படி?

ஆன்மா ஜாக்ர, சொப்ன, சுழுப்திகளில் நேத்திரம், கண்டம், ஹ்ருதயமென்னும் ஸ்தான முன்னிலையாகப் போகங்களை புஜிக்கினும் அது தன்னுடைய முக்கிய ஸ்தானமாகிய ஹ்ருதயத்தை விட்டு எப்போதும் நீங்குகிறதில்லை. ஸர்வாத்மகமான ஹ்ருதய கமல மத்தியில் அதாவது மனாகாசத்தில் நானென்றும் அவ்வாத்ம ஜோதி பிரகாசிக்கிறது. இப்படி ஒவ்வொரு தேகத்திலும் விளங்குவதால் இதையே சாக்ஷி என்றும் துரியமென்றும் சொல்லுவார்கள். இந்த நானென்னும் ஜோதியின் அந்தர்கதமாய் ஸர்வதேகங்களிலும் நானனற்று விளங்கும் பரப்ரஹ்மமாகிற ஆத்மாகாசமே (ஞானாகாசமே) எதார்த்த வஸ்து. இதுவே துரியாதீதம். ஆகையால் ஹ்ருதய மென்பது ப்ரஹ்மத்தை யன்றியில்லை என்று சொல்லப்படுகிறது. மேலும் ப்ரஹ்மம் எல்லா ஜீவர்களினுடைய ஹ்ருதயங்களிலும் ஆன்ம சொரூபமாக பிரகாசிக்கிற காரணத்தாலேயே பிரஹ்மத்திற்கு ஹ்ருதயம் என்றோர் பெயருண்டு.

__

விதம் படு முளத்தொறும் விசேடவறி வாயுற் றிதம்படுத லாலிதய மென்றிறை தன்னை.... - பிரம கீதை

விதம் படும் உளத்தொறும் விசேட அறிவாய் உற்று இதம் படுதலால் இதயம் என்று இறை தன்னை.... - பிரம கீதை

__

ஹ்ருதயம் என்பதன் பொருள் ஹ்ருத் + அயம் என்ற பிரிவால் ப்ரஹ்மமேயாகிறது. ஆன்ம சொரூப மாகப் பிரகாசிக்கும் பிரஹ்ம வஸ்துவானது எல்லா ஜீவர்களினுடைய ஹ்ருதய ஸ்தானத்தில் நிவஸிக்கின்ற தென்பதற்கு சர்வ ஜனங்களும் நான் நான் என்று மார்பை

தொட்டுக் காட்டுவதே போதுமான சாட்சி.

===

நினைவு, கனவு, ஆழ் உறக்கம் என்கிற நிலைகளிலே கண், கழுத்து, இதயம் ந்னு ஆன்மாவுடைய இடத்தைச் சொன்னாலும் அது எப்பவும் ஹ்ருதயத்துல இருந்து கொண்டு வெளியுடன் தொடர்புலதான் இருக்கும். எல்லா ஆன்மாவும் இருக்கிற ஹ்ருதய கமலம், மனாகாசம் ந்னு பலவிதமா சொல்கிற இந்த இடத்தில ஆன்ம ஜ்யோதி பிரகாசிக்கிறது. இப்படி ஒவ்வொரு உடம்பிலும் இது இருக்கிறது. அதை சாக்ஷி ந்னும் துரியம்ன்னும் சொல்லுவாங்க.

இப்படி ஒவ்வொரு உடம்பிலும் உள்ளே இருக்கிறது ஆன்மாகாசம், ஞானாகாசம் என்கிற ஒரே பரபிரம்ம வஸ்துதான். இதனாலேயே பிரம்மத்துக்கு ஹ்ருதயம் ந்னும் பெயர். ஆர்டிக் முதல் அண்டார்டிக் வரை இருக்கிற எல்லா ஜனங்களும் நான் ந்னு சொல்கிறபோது கை தானியங்கியா மார்கிட்டேதான் போகும்; தன் ஹ்ருதயத்தைத்தான் சுட்டிக்காட்டறாங்க. யாரும் வயித்தையோ, கண்ணையோ காலையோ காட்டறாங்களா?

## விசார சங்க்ரஹம் 5

10.சர்வ பிரபஞ்சமும் மனதின் சொரூபமே யெனின் பிரபஞ்சம் பொய்யென்றல்லவோ ஏற்படுகிறது? அப்படியானால் பிரபஞ்சத்திற்கு வேதத்தில் ஸ்ருஷ்டி கூறப்பட்டிருப்பதேன்?

ப்ரபஞ்சம் சுத்தப்பொய்யே யென்பதிற் சம்சயமில்லை. பொய்யான வுலகத்தைப் பொய்யாக்கி மெய்யான ப்ரஹ்மத்தை அறிவிப்பதிலேயே வேதத்தின் முக்கிய கருத்து. இது பற்றியே வேதங்கள் உலகிற்கு ஸ்ருஷ்டியை அங்கீகரித்தனவேயன்றி வேறில்லை. மேலும் மந்தாதிகாரிகளுக்கு க்ரம ஸ்ருஷ்டியால் ப்ரஹ்மத்தில் ப்ரக்ருதி, மகத்தத்வம், தன் மாத்திரை, பூதம், உலகம், தேகமாகிய இவை கிரமமாக வுண்டாகின வென்றும்; தீவிர அதிகாரிகளுக்கு யுகபத் ஸ்ருஷ்டியால் ஆன்மாவாகிய தன்னை யறியாத தோஷத்தினாலுண்டான தனது நினைவுகளாலேயே சொப்னம் போன்று இவ்வுல குண்டாயிற்றென்றும் கூறும். இங்ஙனம் உலக ஸ்ருஷ்டியைப் பலவிதங்களாகக் கூறுவதிலிருந்தே எப்படியேனும் ப்ரபஞ்சத்தைப் பொய்யென்று சாதித்து ப்ரஹ்மத்தை அறிவிப்பதிலேயே வேதத்தின் தாத்பர்யமென்பது பெறப்படும். ஜகம் மித்தையென்பதை சொரூபானந்த வநுபவரூப அநுபூதி நிலையில் எல்லாரும் பிரத்யக்ஷமாகவே அறியலாம்.

பிரம்மத்தைத்தவிர வேற ஒண்ணுமில்லை. அப்ப இந்த பிரபஞ்சம் பொய்தானே? அப்படிப்பட்ட பிரபஞ்சத்தை ஏன் வேதத்திலே எப்படி பிறந்ததுன்னு விவரிச்சு இருக்கு?

வேதத்தின் முக்கிய நோக்கம் பொய்யான உலகத்தை பொய்ன்னு சொல்லி உண்மையான பிரம்மத்தை காட்டுவதே! ஆனா நடைமுறையை கருதி ஆன்மீகத்தில அதிகமா முன்னேறாதவங்களுக்கு ஆகாசத்திலிருந்து வாயு, வாயுவிலிருந்து அக்னி ந்னு வரிசையா சொல்லி இருக்கு. விஷயம் புரிஞ்சுக்ககூடிய தீவிர அதிகாரிகளுக்கு நினைவுகளாலேயே ஒரேயடியா பிரபஞ்சம் உண்டாச்சுன்னு சொல்லி இருக்கும். எப்படி இருந்தாலும் ஆன்ம அனுபூதி நிலையிலே எல்லாருமே ஜகத் பொய்ன்னு புரிஞ்சுக்கலாம்.

## விசார சங்க்ரஹம் 6

11.சதா சலனத்தையே வடிவாகவுடைய மனத்திற்குச் சொரூபாவநுபவங் கூடுமா?

மனத்திற்குச் சத்துவகுணமே ஸ்வபாவமாகலானும் அது ஆகாசத்தைப் போன்று ஸ்வச்சமாயும் நிர்மலமாயுமிருத்த லானும் மனமென்பது உண்மையில் ஞான சொரூபமே. அத்தகைய ஸ்வபாவ நிலையில் அதற்கு மனமென்னும் பெயருமில்லை. ஒன்றை இன்னொன்றாக அறியும் விபரீத ஞானமே மனமெனப்படுகிறது. ஞான மாத்திரமாக விருந்த சுத்த சத்துவ மனதானது தன் ஞான சொரூபத்தை மறந்த அவித்தையால் தானே தமோ குணவசத்தாய் உலக ரூபமாகப் பரிணமித்து ரஜோ குண வசத்தாய் தேகாதிகள் நானென்றும் உலகம் சத்தியமென்றும் பாவித்து இதன் மூல முண்டாகும் ராக த்வேஷாதிகளால் புண்ணிய பாப கர்மங்களை சம்பாதித்து அவ்வாசனையால் ஜனனமரணங்களை யடையும். அநேக ஜன்மங்களிற் செய்து வந்த நிஷ்காம்ய கர்மங்களால் மலம் (பாபம்) நீங்கின மனமானது சற்குரு மூலமாய் சிரவண மனனங்களியற்றி நெடுங்காலம் ப்ரஹ்ம த்யானமாகிற அதாவது அஹம் ப்ரஹ்மமென்னும் ஆத்மாகார மனோவிருத்தியின் சஹஜ ஸ்திதியைப் பெறுவதற்கான நிதித்தியாசனம் செய்யவே மனதின் தமோகுண ரூபமான உலகாகார பரிணாமமடைதலும் ரஜோ குண ரூபமான அவற்றிலுள்ள சலனமும் நீங்கும். நீங்கவே மனம் சூக்ஷ்மமும் நிச்சலமுமாகும். ஸ்தூலமான (பெரிய) கட்டடப்பாரையால் மெல்லிய பட்டு வஸ்திரத்தை இழையிடக் கூடாதது போலவும் காற்றினால் அதிக சலனமாகவுள்ள தீபத்தால் அதி சூக்ஷ்மமான வஸ்துக்களின் லக்ஷணங்களை நிர்ணயிக்கக்கூடாதது போலவும் ஸ்தூலமாகவும் சலனமாகவுமுள்ள ரஜோதமோ குண வசத்தான அசுத்த மனத்தால் மாத்திரம் அதி சூக்ஷ்மமும் நிச்சலமுமான வஸ்துவை அனுபவித்தல் கூடாதே யொழிய முற்கூறியபடி தியானத்தால் சூக்ஷ்மமும் நிச்சலமுமான சுத்த மனத்தில் சொரூபானந்தம் ஆவிர்பவிக்கும். (தோன்றும்). மனமின்றி அனுபவம் கூடாதாகையால் அதி சூக்ஷ்மமான விருத்தியோடுங்கூடிய தெளிந்த மனத்தால் அம்மயமாகவே யிருந்து சொரூபானந்தம் அநுபவித்தல் கூடும்.
அப்போது தான் பிரஹ்ம சொரூபமாயிருப்பது நன்றாய் அனுபவமாகும்.

மனத்திற்குச் சத்துவகுணமே ஸ்வபாவம். அது ஆகாசத்தைப் போல ஸ்வச்சமாயும் நிர்மலமாயும் இருக்கு. மனமென்பது உண்மையில ஞான சொரூபமே. அத்தகைய ஸ்வபாவ நிலையில் அதற்கு மனம் ன்னு பெயருமில்லை. ஒண்ணை இன்னொண்ணா அறிகிற விபரீத ஞானமே மனம் எனப்படுவது. ஞான மாத்திரமாக இருந்த சுத்த சத்துவ மனசு, தன் ஞான சொரூபத்தை அவித்தையால மறந்துடும். தானே தமோ குணவசத்தால உலக ரூபமாகப் பரிணமிக்கும். ரஜோ குண வசத்தால தேகாதிகள் நானென்றும், உலகம் சத்தியமென்றும் பாவிக்கும். இதன் மூலம் உண்டாகும் ராக த்வேஷம் முதலானவைகளால் புண்ணிய, பாப கர்மங்களை சம்பாதிக்கும். அந்த வாசனையால் ஜனன மரணங்களை அடையும். அது சரி, இதிலேந்து எப்படி விடுபடும்?

அநேக ஜன்மங்களில செய்து வந்த நிஷ்காம்ய கர்மங்களால மனசோட அழுக்கு நீங்கும். சற்குரு மூலமாய் சிரவண, மனனங்கள் இயற்றும். நெடுங்காலம் ப்ரஹ்ம த்யானமாகிற அதாவது "நான் ப்ரஹ்மம்" என்னும் ஆத்மாகார மனோவிருத்தியின் இயல்பான ஸ்திதியைப் பெறுவதற்கான நிதித்தியாசனத்தை செய்யும். மனதின் தமோகுண சொரூபம் உலகங்களாக பரிணாமம் அடைவது. அதன் ரஜோ குண ரூபம் அவற்றிலுள்ள சலனம். இவை நிதித்தியாசனம் செய்யவே நீங்கும். மனம் சூக்ஷ்மமாகும்; நிச்சலமுமாகும். எல்லாத்துக்கும் பொருத்தம்ன்னு ஒண்ணு இருக்கு இல்லையா? காலிலே குத்தின முள்ளை எடுக்க கட்டப்பாரையால் குத்த மாட்டோம். பெரிய கட்டப்பாரையால் மெல்லிய பட்டு வஸ்திரத்தை இழையிட மாட்டோம். அது போல காற்றினால அதிக சலனமாக இருக்கிற தீபத்தால அதி நுட்பமான பொருட்கள் எப்படி இருக்குன்னு ஆராய மாட்டோம். அதே போல பருமனாகவும் சலனமாகவும் இருக்கிற ரஜோ, தமோ குண வசத்தில விழுந்துவிட்ட அசுத்த மனத்தால் மாத்திரம் அதி சூக்ஷ்மமும் நிச்சலமுமா இருக்கிற வஸ்துவை அனுபவிக்க முடியாது. முன்னே சொன்னபடி தியானத்தால் சூக்ஷ்மமும் நிச்சலமுமான சுத்த மனத்தில் சொரூபானந்தம் தோன்றும். மனமின்றி அனுபவம் எப்படி கூடும்? அதனால அதி

சூக்ஷ்மமான விருத்தியோட கூடிய தெளிந்த மனத்தால் அம்மயமாகவே யிருந்து சொரூபானந்தம் அநுபவித்தல் கூடும்.
அப்போது பிரஹ்ம சொரூபமா தான் இருக்கிறது நல்லா அனுபவமாகும்.

## விசாரசங்கிரஹம் -7

12.பிராரப்தாநுசாரமான வ்யவகாரங்களை செய்ய வேண்டியிருக்கிற மனதிற்கு வ்யவகார நிலையிலேயே முற்கூறிய சொரூபாநுபவம் வாய்க்குமா?

ப்ராஹ்மணன் என்ன வேஷம் போட்டுக்கொண்டு ஆடினாலும் அவன் மனத்தில் ப்ராஹ்மணனென்னும் பாவம் எப்படியோ அப்படியே எந்த வ்யவகாரங்களிரிருந்தாலும் தேகாதிகள் நானெனத் தோற்றாமல் ஆன்மா நானென்னுந் திடபாவம் வரவேண்டும். மனம் தன் நிலையை விட்டுப் பஹிர் முகப்படுமானால் உடனே "ஓ ஓ! தேகாதிகள் நாமல்லவே! நாமார்?" என்னும் விசாரத்தால் மறுபடியும் தன்னிலையிலேயே யிருத்த வேண்டும். நானாரென்னும் விசாரம் சர்வ துக்க நிவிருத்திக்கும் பரமானந்த ப்ராப்திக்குமான முக்கிய ஹேது. இப்படித் தன்னிலையில் மனம் அடங்க அடங்க, யாதொரு தடையுமில்லாமல் சொரூபானுபவம் தானாகவே வாய்க்கும். அப்பால் விஷய துக்கங்கள் மனதில் தாக்கா. எல்லாம் ஸ்வப்நம் போல் பற்றற்றுத் தோன்றும். எப்போதும் சர்வ பரிபூரணமாயுள்ள ஸ்வாத்ம பாவனையை மறவாதிருத்தலே முடிவான பக்தியும் யோகமும் ஞானமும் மற்றுமுள்ள எல்லா தபசுகளுமா மென்று பெரியோர் கூறுகின்றனர்.

பிறந்துட்டோம். வேற வழியில்லை. கர்மாவை அனுபவிச்சே தீர்க்கணும். பிராரப்தம் அப்படி இருக்கு. அதுக்கு தகுந்தபடி வ்யவகாரங்களை செய்ய வேண்டியிருக்கிற மனசுக்கு வ்யவகார நிலையிலேயே முன்னே சொன்ன சொரூபாநுபவம் வாய்க்குமா?

ஒத்தன் என்ன வேஷம் போட்டுக்கொண்டு ஆடினாலும் மேடையிலே ஜாதி இல்லைன்னு பேசினாலும் அவன் மனசில நான் இன்ன ஜாதி என்கிற பாவம் எப்படி போகாம இருக்குமோ, அப்படியே எந்த வ்யவகாரத்திலே இருந்தாலும் தேகம் முதலானது நான் ந்னு தோணாம ஆன்மா நான் என்கிற திடபாவம் வரணும். மனம் அந்த தன் நிலையை விட்டு வெளியே போகுமானால் உடனே "ஓ ஓ! தேகம் முதலானதெல்லாம் நாம இல்லையே! நாம் யார்?" என்கிற விசாரத்தால மறுபடியும் தன்னிலையிலேயே அதை கொண்டு வரணும். நான் யார் என்கிற விசாரம் எல்லா துக்கங்களும் போவதற்கும், பரமானந்தம் கிடைக்கவும் முக்கிய ஹேது. இப்படித் தன்னிலையில் மனம் அடங்க அடங்க, யாதொரு தடையுமில்லாமல் சொரூபானுபவம் தானாகவே வாய்க்கும். அதுக்கு அப்புறமா விஷய துக்கங்கள் மனசில தாக்கா. எல்லாம் கனவு போல பற்று இல்லாம தோணும். எப்பவும் சர்வ பரிபூரணமா இருக்கிற ஸ்வாத்ம பாவனையை மறக்காம இருக்கிறதே முடிவான பக்தியும் யோகமும் ஞானமும் மத்த எல்லா தபசுகளுமாம் ன்னு பெரியவங்க சொல்கிறாங்க.

## விசாரசங்கிரஹம் -8

13. கருமங்களில் ப்ரவிருத்திக்கும்கால் இக்கருமத்தை செய்யும் கர்த்தாவும் இக்கரும பலனையநுபவிக்கும் போக்தாவும் நாமல்ல. இது திரிகரணங்களின் சேஷ்டையாகும் என்ற பாவத்துடனிருக்கலாமா?

ஆத்ம தேவதையாகிய தன்னிடத்திலிருத்தியதும் எப்போதும் அதை விட்டு நீங்காமல் வ்யவஹாரங்களில் உதாசீன பாவத்துடனிருக்கிறதுமான மனது மேற்கூறியபடி

சங்கற்பித்தல் கூடுமா? இப்படிப்பட்ட சங்கற்பங்களன்றோ பந்தம்? இவ்வித நினைவுகள் வாசனையால் வந்தாலும் மனதை நினைவின் வழி செல்ல விடாமல் தன்னிலையிலிருத்த முயல்வதோடு வ்யவஹாரங்களில் உதாசீன பாவத்தோடு மிருத்தல் வேண்டும். மனதில் இது நல்லதா? அது நல்லதா? இதை செய்யலாமா அதை செய்யலாமா வென்பதாகிய நினைவுகளுக்குமிடங் கொடாமல் அத்தகைய நினைவுகளேனுந் தோன்று முன்னரே ஜாக்கிரதையாய்த் தெரிந்து அதை தன்னிலையிலிருத்தி விட வேண்டும். கொஞ்சமிடங் கொடுத்தால் தனக்கு ஹிதமாயிருப்பவனைப் போலிருந்து கெடுதி செய்யும் ஹித சத்துருவைப்போல நம்மை தலை கீழாய்த் தள்ளிவிடும். தன்னை மறப்பதாலன்றோ இவ்வித நினைவுகள் தோன்றி மேன்மேலும் அனர்த்தமுண்டாக்குகின்றன? விவேகத்தால் “நானொன்றும் செய்யவில்லை. எல்லாம் கரணங்களின் சேஷ்டைகளே” என்று சங்கற்பித்தல் வாசனையாகிற நினைவின் வழி செல்லும் மனதைத் தடுத்தற்குரிய உபாயமேயென்றாலும் நினைவின் வழி சென்றாலன்றோ முற்கூறியபடி தடுக்க வேண்டும்? தன்னிலையிலிருக்கின்ற மனது நானென்றும் எனக்கு வ்யவஹாரமிருக்கிறதென்றும் சங்கற்பிக்குமா? எவ்விதத்திலும் மெல்ல மெல்ல ஈச்வரனாகிய தன்னை மறவாதிருக்கவே முயற்சிக்க வேண்டும். அது ப்ராப்தியானால் எல்லாம் சித்தியாகும். மற்றெவ்விஷயங்களிலும் மனத்தைச்செலுத்த வேண்டாம். பித்தனைப்போல் கர்மத்தால் நேரிட்ட வ்யவஹாரங்களை செய்தாலும் நான் செய்கிறேன் என்ற நினைவு வராமல் தன்னிலையிலேயே மனதை வைத்திருக்க வேண்டும். உதாசீன பாவத்துடன் எத்தனையோ பக்தர்கள் எவ்வளவோ வ்யவஹாரங்களை செய்திருக்கவில்லையா?

=

கருமங்களில் ஈடுபடுகிறப்ப இதை செய்கிறவனும் இதோட பலனை அனுபவிக்கிறவனும் நானில்லைன்னு நினைப்போட இருக்கலாமா? இது திரிகரணங்களின் சேஷ்டையாகும் என்ற பாவத்துடனிருக்கலாமா?

3 ஆவது கேள்விக்கு பதிலில் சொன்னபடி விசாரிச்சு ஆத்ம தேவதையாகிய தன்னிடத்தில தன்னை இருத்தியதும், எப்போதும் அதை விட்டு நீங்காமல் வியவகாரங்களில கண்டுக்காம உதாசீனத்தோட இருக்கிற மனசு மேலே சொன்னபடி சங்கற்பிக்குமா? இப்படிப்பட்ட சங்கற்பங்கள்தான் பந்தம். இவ்வித நினைவுகள் வாசனையால வந்தாலும், மனதை அந்த வழியில செல்ல விடாம, தன்னிலையில இருத்த முயற்சி செய்வதோடு வியவகாரங்களில உதாசீன பாவத்தோடும் இருக்கணும். மனசில இது நல்லதா? அது நல்லதா? இதை செய்யலாமா? அதை செய்யலாமா? என்பதாகிய நினைவுகளுக்கும் இடம் கொடாமல் அத்தகைய நினைவுகள் ஏதேனும் தோன்று முன்னரே ஜாக்கிரதையாய்த் தெரிந்து அதை தன்னிலையில இருத்தி விடணும். கொஞ்சம் இடம் கொடுத்தால் கூட தனக்கு ஹிதமா இருப்பவனைப் போல இருந்து கெடுதி செய்யும் ஹித சத்துருவைப்போல, நம்மை தலை கீழாய்த் தள்ளிவிடும். தன்னை மறப்பதாலதானே இந்த மாதிரி நினைவுகள் தோன்றி மேன்மேலும் அனர்த்தம் உண்டாகுது? விவேகத்தால் "நான் ஒண்ணும் செய்யலை. எல்லாம் கரணங்களின் சேஷ்டைகளே" என்று சங்கற்பிக்கிறது வாசனையாகிற நினைவோட வழில போற மனசை தடுக்க நல்ல உபாயமே. அப்படின்னாலும் நினைவின் வழி போனாதானே முன்னே சொன்னபடி தடுக்கணும்? தன்னிலையில இருக்கிற மனசு நான் ன்னும் எனக்கு வ்யவஹாரம் இருக்குன்னும் சங்கற்பிக்குமா? எந்த விதத்திலும் மெல்ல மெல்ல ஈச்வரனாகிய தன்னை மறக்காம இருக்கவே முயற்சிக்கணும். அது கிடைச்சால் எல்லாம் சித்தியாகும். வேற எந்த விஷயங்களிலும் மனத்தைச் செலுத்த வேண்டாம். பைத்தியக்காரன் ஏதாவது செஞ்சுகிட்டு இருப்பான் இல்லையா? அவனைப்போல கர்மத்தால் நேரிட்ட வியவகாரங்களை செய்தாலும் நான் செய்யறேன் என்ற நினைவு வராமல் தன்னிலையிலேயே மனதை வைத்திருக்க வேண்டும். உதாசீன பாவத்துடன் எத்தனையோ பக்தர்கள் எவ்வளவோ வியவகாரங்களை செய்திருக்கவில்லையா?

## விசார சங்க்ரஹம் 9

இன்று ரமண ஜயந்தி!
14. சந்நியாசத்தின் யதார்த்தமான தாத்பர்யம் என்ன?
சந்நியாசம் என்பது நானென்னும் சங்கற்ப தியாகமேயன்றி வெளி விஷயங்களை விடுவதல்ல. இந்த சந்நியாசமுள்ளவனுக்கு ஏகாந்தத்தி லிருந்தாலும் அபார சம்சாரத்திலிருந்தாலும் சமமாகவே தோன்றும். வேறு விஷயத்தில் மனதைச் செலுத்தியிருக்கும் போது பக்கத்திலுள்ளது தெரியாதது போல ஞானி எவ்வளவு வியவகாரங்களை செய்யினும் நானென்ற போதம் வராமல் தன்னிடத்திலேயே மனதிருப்பதால் அவன் ஒன்றும் செய்யாதவனேயாம். தான் அசையாமற் படுத்திருந்தும் கனவில் தலை கீழாக விழுவதாய்க் காண்பது போல அஞ்ஞானி அதாவது நானென்பதறாதவன் ஏகாந்தனாய் சதா நிஷ்டையிலிருந்தாலும் சர்வ வ்யவகாரங்களையும் செய்தவனேயாம் என்று பெரியோர்கள் கூறியிருக்கின்றனர்.

சந்நியாசத்தோட எதார்த்தமான தாத்பர்யம் என்ன?
சந்நியாசம் என்பது நான் என்னும் நினைப்பை ஒழிக்கிறது அன்றி வெளி விஷயங்களை விடுவது இல்லை. இந்த சந்நியாசம் உள்ளவனுக்கு ஏகாந்தத்தில - தனியா இருந்தாலும் அபாரமான சம்சாரத்தில இருந்தாலும் சமமாகவே தோணும். வேற விஷயத்தில மனசை செலுத்தி இருக்கறப்ப பக்கத்தில உள்ளது தெரியாதது போல ஞானி எவ்வளவு வியவகாரங்களை செஞ்சாலும் நான் என்கிற நினைப்பு வராம தன்னிடத்திலேயே மனதிருப்பதால் அவன் ஒன்றும் செய்யாதவனேயாம். தான் அசையாம படுத்து இருந்தும் கனவில தலை கீழாக விழுவதாய்க் காண்பது போல அஞ்ஞானி அதாவது நானென்பது போகாதவன் ஏகாந்தனாய் எப்பவும் நிஷ்டையிலிருந்தாலும் எல்லா வ்யவகாரங்களையும் செய்தவனேயாம் என்று பெரியோர்கள் சொல்லியிருக்காங்க.

## விசார சங்கிரஹம் 10

15. கரணேந்திரியாதிகள் அறியுந் தர்மத்தை யுடையனவாக விருந்தும் அவை திருசிய பதார்த்தங்களெனப்படுவதேன்?

| | |
|---|---|
| திருஷ்யம் அல்லது அறிபடுபொருள் | திருக்கு அல்லது அறிபொருள் |
| கடம் | பார்ப்பவன் |
| தேக கடாதிகள் | கண் |
| கண் | கண்ணிந்திரியம் |
| கண்ணிந்திரியம் | மனம் |
| மனம் | ஜீவன் |
| ஜீவன் | அறிவு |

மேற்கண்டபடி அறிவாகிய நாமே எல்லா பதார்த்தங்களையும் அறிவதால் நாமே திரிக்கெனப்படுவோம். கடாந்தமாயுள்ள பதார்த்தங்கள் யாவும் நம்மால் அறியப்படுவதால் திருசியங்களாம். மேற்காட்டியுள்ள அறிவறியாமை யடுக்குகளிற் கூறப்படும் திருக்கு திரிசியங்களிலும் ஒன்று மற்றொன்றுக்குத் திருக்காக விருப்பினும் அது வேறொன்றுக்கு திருசியமாகலான் அவை யாவும் உண்மையில் திருக்காகா. நாம் எல்லாவற்றையும் அறிவதால் திருக்கென்றும் ஒன்றாலும் அறியப்படாததால் திருசியமன்று என்று சொல்லப்பட்டாலும் திருசியங்களை பற்றியே நாம் திருக்கென்று வழங்கப்படுகிறோமே யன்றி உண்மையில் திருசியமென்பது நமக்கன்னிய மின்மையால் நாம் அவ்விரண்டுக்கும் அதீதமான பொருளாவோம். ஏனையவ எல்லாம் திருக்கு திருசியங்களுக்கு உட்பட்டனவே.

கண், தோல் முதலியவனைத்தும் அறிகிறவையா இருக்கிறப்ப ஏன் அதை எல்லாமே அறியப்படும் பொருளா சொல்கிறாங்க?

அவை எல்லாமே ஒண்ணை அறிஞ்சாலும் அதை அறிய இன்னும் ஒண்ணு வேண்டியிருக்கு.
பட்டியலை பாத்தா ஒண்ணு மத்ததை பாத்தாலும் அதை ஒண்ணு பார்க்குது. ஒத்தன் ஒரு குடத்தை பார்க்கிறதா வெச்சுப்போம். குடத்தை கண் பாக்குது. ம்ம்ம்ம்... ஆனா அதால மட்டுமே "பாக்க" முடியாது. நம் சித்தாந்தங்கள்படி கண் என்கிற உறுப்புக்கு ஒரு சக்தி பாயணும். அப்பத்தான் அது பார்க்கும். (இந்த சக்தியை இந்திரியம் என்கிறாங்க.) அப்படின்னாலும் மனசு அதில ஈடுபடணும். மனசு எங்கோ இருக்க நடந்து போகிறோம். எதிரே ஒத்தர் மேலே முட்டிக்கிறோம், இல்லையா? இந்த மனசு என்ன செய்யுதுன்னு ஜீவாத்மா பாக்கும். இந்த ஜீவனையோ சித் ஆன அறிவு பாக்கும். ஆக கடைசிலே எல்லாத்தையும் பாக்கிறதா இருக்கிறது இந்த பேரறிவுதான். இந்த நிலையிலே பார்க்கிறதும், பார்க்கப்படுவதும் நாமே - அறிவே. அதனால இந்த சமாசாரத்தில நாம அகப்பட மாட்டோம். மத்த எல்லாமே பார்க்கிறதுன்னாலும் எல்லாமே பார்க்கப்படுவதும்தான்.

## விசாரசங்கிரஹம் - 11

16.அகங்காரம் ஜீவன் ஆன்மா ப்ரஹ்மம் ஆகிய இவற்றுக்கு தாதான்மிய முண்டாவதெவ்வாறு?

திருஷ்டாந்தம் - தாஷ்டாந்தம்
அயப் பிண்டம் - அகங்காரம்
தப்தாய பிண்டம் - ஆன்ம ஸ்வபாவத்தோடு அத்தியாசமாய்த் தோன்றுகிற ஜீவன்
தப்தாய பிண்டத்திலுள்ள அக்னி - தேகந்தோறும் விளங்கும் ஜீவனிலுள்ள சிற்பிரகாசம் அதாவது கூடஸ்த ப்ரஹ்மம்
ஏகமாயுள்ள அக்னி ஜ்வாலை -ஏகமாயுள்ள வ்யாபக ப்ரஹ்மம்

மேற்காட்டிய திருஷ்டாந்தத்தால் அகங்கார ஜீவ சாக்ஷி சர்வசாக்ஷிகளுடைய தாதான்மியம் விளங்கும்.
தட்டான் மெழுகுருண்டையில் கணக்கற்ற நாநாலோகங்களின் அணுக்களடங்கி ஒரே மெழுகாக காணப்படுவது போன்று சுழுத்தியில் எல்லா ஜீவர்களுடைய ஸ்தூல சூக்கும தேகங்களும் ஒரே யிருட்டாகிய அவித்தை அதாவது சமஷ்டி மாயையில் அடங்கி ஆத்மாவில் லயித்து ஒன்று பட்டிருத்தலால் எங்கும் ஒரே இருட்டைக் காண்கிறார்கள். இந்த சுழுத்தியாகிய இருட்டிலிருந்து சூக்கும தேகம் அதாவது அகங்காரமும் அதிலிருந்து ஸ்தூல தேகமும் உண்டாகிறது. அகங்காரம் உண்டாகிற பொழுதே தப்பதாய பிண்டம் போன்று ஆன்ம ஸ்வபாவத்தோடும் அத்யாசமாய்த் தோன்றுகிறது. இங்ஙனம் சிற்பிரகாசத்தோடு தாதான்மியமாகக்கூடியிருக்கும் மனமாகிய அகங்கார ரூபனான ஜீவனையன்றி ஜீவ சாக்ஷி யாகிய ஆன்மாவும் ஆன்மாவை யன்றி சர்வ சாக்ஷியாகிய ப்ரஹ்மமும் இன்றாம்.
தப்பதாயப்பிண்டமானது கொல்லனாலெவ்வாறடிப் பட்டு விகாரமுற்றாலும் எப்படி அதிலுள்ள அக்னி மாத்திரம் அவற்றால் யாதொரு சலனமும் அடைவதில்லையோ அப்படியே ஜீவன் எவ்வளவு வ்யவஹாரங்களி லுழன்று சுக துக்கங்களை யனுபவித்தாலும் அதிலுள்ள ஆன்ம ஜோதி மாத்திரம் அவற்றால் யாதொரு சலனமுமின்றி ஆகாசம் போல் வ்யாபகமாயும் ஞான மாத்திரமாயும் ஏகமாயும் விளங்கும் ப்ரஹ்ம சொரூபமாகவே ஹ்ருதயத்தில் பிரகாசிக்கிறது.

--
மேற்காட்டிய திருஷ்டாந்தத்தால் அகங்கார ஜீவ சாக்ஷி சர்வசாக்ஷிகளுடைய தாதான்மியம் விளங்கும்.

தட்டான் வேலை செய்யறப்ப பாத்தா கைவசம் ஒரு மெழுகுருண்டை வெச்சு இருப்பார். என்னதான் சேதாரம்ன்னு கணக்கு காட்டினாலும் ஒரு சின்ன துகள் கூட சேதாரமாகாது. ராவறதை எல்லாம் இந்த மெழுகுருண்டையில ஒத்தி ஒத்தி சேத்துடுவார். இந்த மெழுகுருண்டையில தங்கம் இருக்கலாம்; வெள்ளி இருக்கலாம்; வேற எதும் கூட இருக்கலாம். ஆனாலும் கணக்கற்ற பல வித லோகங்களின் அணுக்களடங்கி ஒரே மெழுகு உருண்டையா காணப்படுவது போல;

சுழுத்தியில எல்லா ஜீவர்களுடைய ஸ்தூல, சூக்கும, தேகங்களும் ஒரே இருட்டாகிய அவித்தை அதாவது சமஷ்டி மாயையில் அடங்கி ஆத்மாவில் லயித்து ஒண்ணா இருக்கிறதால் எங்கும் ஒரே இருட்டைக் காண்கிறாங்க.

கொல்லன் உலையில நெருப்பு திகுதிகுன்னு எரியும். அதில போட்ட இரும்புத்துண்டு [அயப்பிண்டம்] நல்லா பழுக்க காஞ்சு அதுவும் திகுதிகுன்னு காணும். [தப்தாய பிண்டம்.] கொல்லன் இதை சம்மட்டியால அடி அடின்னு அடிச்சு உருவை மாத்துவான். கட்டியா இருந்த இரும்பு இப்ப தட்டையா - லாடமா ஆயிடுத்து. அடிச்ச அடியிலே இரும்புத்துண்டுக்குத்தான் பாதிப்பே தவிர அதிலிருந்த சூடுக்கு பாதிப்பு உண்டா? அந்த சூடு தானாதான் தணியும்.

இந்த சுழுத்தியாகிய இருட்டிலிருந்து சூக்கும தேகம் அதாவது அகங்காரமும் (நான் என்பதும்) அதிலிருந்து ஸ்தூல தேகமும் உண்டாகிறது. அகங்காரம் உண்டாகிற பொழுதே தப்பதாய பிண்டம் போல ஆன்ம ஸ்வபாவத்தோடும் அத்யாசமாயும் (இல்லாததை இருப்பதாக பார்க்கிறது) தோணும். இப்படி சித் பிரகாசத்தோடு தாதான்மியமா கூடியிருப்பது மனமாகிய அகங்கார ரூபனான ஜீவன். (சூரியனும் சூர்ய கிரணங்களும் ஒண்ணா? வேற வேறயா? இப்படி பிரிக்க முடியுமா முடியாதா ந்னு இருக்கிறது தாதான்மியம்.) இந்த ஜீவன் இல்லாம ஜீவ சாக்ஷியாகிய ஆன்மா இல்லை. இந்த ஆன்மா இல்லாம சர்வ சாக்ஷியாகிய ப்ரஹ்மமும் இல்லை.
சூடாக்கிய இரும்பு துண்டு கொல்லனால எப்படி அடிப் பட்டு விகாரமா ஆனாலும் எப்படி அதிலுள்ள அக்னி மாத்திரம் அவற்றால் எந்த ஒரு சலனமும் அடைவது இல்லையோ அப்படியே ஜீவன் எவ்வளவு வ்யவஹாரங்களில் உழன்று சுக துக்கங்களை அனுபவிச்சாலும் அதிலுள்ள ஆன்ம ஜோதி மாத்திரம் அவற்றால் எந்த ஒரு சலனமும் இல்லாம ஆகாசம் போல் எங்கும் ஊடுருவியும், ஞானமாயும் ஒண்ணாவும் விளங்கும் ப்ரஹ்ம சொரூபமாகவே ஹ்ருதயத்தில பிரகாசிக்கும்.

## விசார சங்க்ரஹம் 12

17.ஹ்ருதயத்தில் ஆன்மாவே ப்ரஹ்மமாகப் பிரகாசிக்கிறதென்பதெப்படி?

தீப ஜ்வாலையினுள்ளே யுள்ள காலியிடத்திலிருக்கும் பூதாகாசமானது அந்த ஜ்வாலையினுள்ளும் புறம்பும் அபேதமாய் நிறைந்து எல்லையற்று விளங்குதல் போன்று ஹ்ருதயத்தில் ஆன்ம ஜோதியினுள்ளே யுள்ள ஞானாகாசமும் அவ்வான்ம ஜோதியினுள்ளும் புறம்பும் அபேதமாய் நிறைந்து எல்லையற்று விளங்குகிறது. இதுவே ப்ரஹ்மமென்பதாம்.

--
ஹ்ருதயத்தில் ஆன்மாவே ப்ரஹ்மமாகப் பிரகாசிக்கிறது என்பது எப்படி?

தீபம் ஒண்ணு எரியுது. அதன் ஜ்வாலைக்கு உள்ளே இருக்கிற காலியிடத்தில இருக்கிறது என்ன? ஆகாசம் -ஸ்பேஸ். அது அந்த ஜ்வாலைக்கு உள்ளேயும் இருக்கு. வெளியேயும் வித்தியாசம் பாக்காம நிறைஞ்சு எல்லையற்று இருக்கு. அதப் போல ஹ்ருதயத்தில ஆன்ம ஜோதியினுள்ளே உள்ள ஞானாகாசமும் அந்த ஆன்ம ஜோதியினுள்ளும் புறம்பும் அபேதமாய் நிறைஞ்சு எல்லையில்லாம இருக்கிறது. இதுவே ப்ரஹ்மமென்பதாம்.

## விசார சங்க்ரஹம் 13

18.ஏகமாயும் அகண்டமாயும் விளங்கும் சொப்பிரகாச வடிவ ஆன்ம ஜோதியின் கண் அவஸ்தாத்ரயம், தேகத்ரயமாதிய கற்பனைகள் தோற்றுவதும்; தோற்றினும் ஆன்மா மாத்திரம் எப்போதும் அசலமாகவே யுள்ளதென்பது மெவ்வாறு?

| திருஷ்டாந்தம் | தாஷ்டாந்தம் |
|---|---|
| தீபம் | ஆன்மா |
| கபாடம் | நித்திரை |
| வாயிற்படி | மஹத்தத்வம் |
| உட் சுவர் | அவித்தை அல்லது காரண தேகம் |
| கண்ணாடி | அகங்காரம் |
| ஜன்னல்கள் | ஞானேந்திரிய பஞ்சகம் |
| உள் மனை | காரணதேகம் விளங்கும் சுழுத்தி |
| நடு மனை | சூக்ஷ்மதேகம் விளங்கும் சொப்பனம் |
| முற்றம் | ஸ்தூல தேகம் விளங்கும் ஜாக்ரம் |

ஆத்ம (1) தீபம் சுஷுப்தியில் அவித்தை (4) யுட் சுவரும் நித்திரைக் கதவும் கூடின காரண தேக (7) வுள் மனையில் தானே விளங்க கால கருமாதி பிராணணால் உறக்கக் (2) கதவைத் திறக்கவும் மஹத்தத்வ (3) வாயிற்படிக் கடுத்த அகங்காரக் (5) கண்ணாடி ஆத்ம பிரதிபலனைப் பிரகாசத்துடன் சொப்பன (8) நடுமனையையும் பஞ்சேந்திரியப் (6) பலகணிவழி ஜாக்ர (9) முற்றத்தையும் விளக்கி கால கருமாதி வாயுவால் நித்திரா கபாடம் மூடவே நனவு கனவுகளோடு நானற்று தான் (ஆன்மா) மாத்திரம் என்றும் விளங்குவதால் ஆத்மாவின் அசலமான இருப்பும் அகங்காரத்திற்கும் அதற்குமுள்ள பேதமும் அவஸ்தாத்ரய தேகத்ரயமாதியன தோற்றுவதும் இத்திருஷ்டாந்தத்தால் நன்கு விளங்கும்.

ஆத்ம (1) தீபம் சுஷுப்தியில் அவித்தை (4) யுட் சுவரும் நித்திரைக் கதவும் கூடின காரண தேக (7) வுள் மனையில் தானே விளங்க கால கருமாதி பிராணணால் உறக்கக் (2) கதவைத் திறக்கவும் மஹத்தத்வ (3) வாயிற்படிக் கடுத்த அகங்காரக் (5) கண்ணாடி ஆத்ம பிரதிபலனைப் பிரகாசத்துடன் சொப்பன (8) நடுமனையையும் பஞ்சேந்திரியப் (6) பலகணிவழி ஜாக்ர (9) முற்றத்தையும் விளக்கி கால கருமாதி வாயுவால் நித்திரா கபாடம் மூடவே நனவு கனவுகளோடு நானற்று தான் (ஆன்மா) மாத்திரம் என்றும் விளங்குவதால் ஆத்மாவின் அசலமான இருப்பும் அகங்காரத்திற்கும் அதற்குமுள்ள பேதமும் அவஸ்தாத்ரய தேகத்ரயமாதியன தோற்றுவதும் இத்திருஷ்டாந்தத்தால் நன்கு விளங்கும்.




ஒரு வீடு இருக்கு. வீட்டில உள்ளே ஒரு அறை. அதில ஒரு விளக்கு எரியுது. அதுக்கு வெளியே ஒரு அறை. இந்த ரெண்டுக்கும் நடுவே ஒரு கதவு இருக்கு. வெளி அறையிலேந்து முற்றத்துக்கு நடுவே ஜன்னல்கள் இருக்கு
இந்த முற்றத்தை ஸ்தூல தேகம் ஜாக்கிரத அவஸ்தையாக கற்பனை செய்யுங்க.
இதில் உள்ள ஜன்னல் வழியா வெளி அறையை பார்க்கலாம்.
வெளி அறை ஸூக்ஷும தேகம். ஸ்வப்ன அவஸ்தை.
இதையும் உள் அறையையும் பிரிக்கிறது ஒரு சுவர். உள் அறை காரண தேகம். (ஆணவம், கன்மம், மாயை)

அதுக்கு இருக்கிறது மஹத்தத்வம் என்கிற வாசல். அதுல இருக்கிற கதவு தூக்கம்.
இதுக்கு கொஞ்சமே கொஞ்சம் வெளியே ஒரு கண்ணாடி இருக்கு. அது அந்தக்கரணம்.
வெளியிருந்து பாத்தா வீட்டு முற்றம் மட்டுமே தெரியும்.
அதிலேந்து எட்டி ஜன்னல் வழியே பாத்தா உள் அறை தெரியும்.
உள் அறையில் போய் நின்னால்தான் கதவு திறக்கும்போது கண்ணடியில பிரதிபலிக்கிற உள்ளே இருக்கிற விளக்கை பார்க்கலாம். சரியா?

இப்ப ஆன்மாதானே எல்லாவற்றையும் பிரகாசிபிக்கிறது? இந்த ஆன்ம சக்தி இல்லாமல் ஒண்ணுமே இயங்காது. இது எப்படி வெளிப்படுதுன்னு பார்க்கலாம்.

ஆன்மா எப்பவும் பிரகாசிக்கும்.
அதை சுத்தி இருக்கிறது அவித்தை அல்லது காரண சரீரம். இது நித்திரை என்கிற ஆழ் உறக்க நிலை - ஸுஷுப்தி யால சூழப்பட்டு இருக்கு.
காலம் கருமம் பிராணன் ஆகியவற்றால இந்த உறக்க கதவு கலைஞ்சா ஆன்ம ஒளி அகங்காரம் வழியா வெளி அறையில பிரகாசிக்கும். இது ஸ்வப்ன நிலை இல்லையா?
இந்த வெளி அறையிலிருந்து முற்றத்துக்கு வெளிச்சம் வரணும்ன்னா அது இந்திரியங்கள் என்கிற ஜன்னல் வழியாதான் வரும்.

இப்ப ரிவர்ஸ்ல போகலாமா? ஏன் போகணும்? ஆன்ம தரிசனத்துக்கு.
பஞ்ச இந்திரியங்களையும் தாண்டிப்போக ஸ்வப்னம். அதையும் தாண்டிப்போக ஆழ் தூக்கத்தில அவித்தை. அகங்காரத்தையும் தாண்டிப்போக உள்ளே ஆன்மா மட்டுமே பிரகாசிக்கும்.

இப்ப படிச்சுப்பாக்கலாமா?

ஆத்ம (1) தீபம் சுஷுப்தியில் அவித்தை (4) உட் சுவரும் நித்திரைக் கதவும் கூடின காரண தேக (7) உள் மனையில் தானே விளங்க; கால கருமாதி பிராணணால் உறக்கக் (2) கதவைத் திறக்கவும் மஹத்தத்வ (3) வாயிற்படிக்கு அடுத்த அகங்காரக் (5) கண்ணாடி ஆத்ம பிரதிபலனைப் பிரகாசத்துடன் சொப்பன (8) நடுமனையையும் பஞ்சேந்திரியப் (6) பலகணிவழி ஜாக்ர (9) முற்றத்தையும் விளக்கி கால கருமாதி வாயுவால் நித்திரா கபாடம் மூடவே நனவு கனவுகளோடு நானற்று தான் (ஆன்மா) மாத்திரம் என்றும் விளங்குவதால் ஆத்மாவின் அசலமான இருப்பும் அகங்காரத்திற்கும் அதற்குமுள்ள பேதமும் அவஸ்தாத்ரய தேகத்ரயமாதியன தோற்றுவதும் இத்திருஷ்டாந்தத்தால் நன்கு விளங்கும்.

## விசார சங்கிரகம்-15

20. மனோபலமின்மைக்கும் காரணம் யாது?

ஆன்ம விசாரத்திற்குத் தன்னை அதிகாரியாகச் செய்கிற சாதனங்களான தியான யோக மாதியவையில் முன்னரே வேண்டிய அளவு கிரமமாக பயின்று, அதனால் இடையறாத சஜாதீய விருத்தியின் பிரவாகத்தை சஹஜமாகப் பெற்றிருக்கும் பரிபக்குவமுள்ள மனதாயிருந்தால் இவ்விசார சிரவணஞ் செய்தவுடனே தனது எதார்த்த சொரூபத்தை அபரோக்ஷமாகத் தெரிந்து எப்போதும் தன்னிலையிலிருந்து பரம சாந்தியுடன் விளங்கும். இங்ஙனம் பரிபக்குவமடையாத மனதிற்கு விசார சிரவணத்தால் உடனே அபரோக்ஷ ஞானமும் உப சாந்தமும் வாய்ப்பது துர்லபமே; என்றாலும் சிறிது காலம் மனவொடுக்கத்துக்குரிய சாதனங்களிற் பழகி வந்தால் காலக்கிரமத்தில் சித்தோபசாந்தம் சித்திக்கும்.

--மனோ பலம் இல்லைனா அதுக்கு காரணம் அது இன்னும் பரி பக்குவம் ஆகலை என்கிறதுதான். ஆத்ம விசாரத்துக்கு தன்னை அதிகாரியா செய்கிறதுக்கு சாதனங்கள் தியானம், யோகம் முதலானவை. இதில போதுமான அளவு பயிற்சி எடுக்கணும். அதுவும் முறையான பயிற்சி. இதனால மனசு கொஞ்சம் கூட இடையில்லாம இயல்பாக ஆன்மாவை நாடி பயணிச்சு கொண்டு இருக்கும். அப்படிப்பட்ட மனசு கேள்வி ஞானத்தின் பின்னணியிலே விசாரம் செய்தவுடன் தன் யதார்த்த சொரூபத்தை வெளிப்படையாக தெரிஞ்சு கொள்ளும்; தன்னிலையிலேயே நிற்கும். அந்நிலையிலே பரம சாந்தத்துடன் இருக்கும். இப்படி மனசு விசாரத்தாலே உடனே அந்நிலையை அடையலைன்னாலும் இந்த மன ஒடுக்க சாதனங்களில பழக பழக காலம் செல்ல செல்ல இந்நிலையில் லயிக்கும்.

## விசார சங்கிரகம் -16

21.மனவொடுக்கத்துக்குரிய சாதனங்களில் முதன்மையானதெது?

ப்ராண வொடுக்கமே மனவொடுக்கத்துக்குச் சாதனமாம்.
ப்ராண வாயுவை ஒடுக்குகிறதே மனசை ஒடுக்குவதில முதன்மையான சாதனமாம்.

22.ப்ராண நிரோதமுண்டாவ தெப்படி?

கேவல கும்பகத்தாலேனும் ப்ராணாயாமத்தாலேனும் ப்ராண நிரோதமுண்டாகும்.
வெறும் கும்பகம் செய்வதாலேயும் அல்லது முறையான ப்ராணாயாமத்தாலேயும் ப்ராணன் ஒடுங்கும்.

23.கேவல கும்பகம் என்றாலென்ன? (வெறும் கும்பகம் என்கிறது என்ன?)

இரேசக பூரகங்களின்றி ப்ராணனை ஸ்திரப்படுத்துவதாம். இது ப்ராணோபாசனை முதலியவற்றால் சித்திக்கத்தக்கது.

24.ப்ராணாயாமம் என்றாலென்ன?
யோக சாஸ்திரங்களிற் கூறியுள்ள கணக்கின்படி இரேசக பூரக கும்பகங்கள் வாயிலாய் ப்ராணனை ஸ்திரப்படுத்துவதாம்.

சாதாரணமா ப்ராணாயாமத்தில மூச்சை உள்ளே இழுப்பதும் தக்க வைச்சு கொள்வதும் வெளியே விடுவதும் அங்கங்கள். இதோட வழி முறைகள் யோக சாஸ்திரத்திலே சொல்லி இருக்கு. வெறும் கும்பகத்திலே மூச்சை உள்ளே எடுக்கிறதும் வெளியே விடுகிறதும் அங்கங்களா இல்லை. இது ப்ராண உபாசனையால சித்திக்கும்.

25.ப்ராண நிக்ரகம் மனோநிக்ரகத்திந்குச் சாதனமா யிருப்பதெப்படி?
ப்ராணனைப் போலவே மனமும் வாயுவின் அம்சமாக லானும் இவ்விரண்டுக்குமே சலிக்குந் தன்மை சுபாவமாக லானும் இவ்விரண்டின் பிறப்பிடமும் ஒன்றே யாகலானும் இவ்விரண்டுள் ஒன்றி னொடுக்கமே மற்றதி னொடுக்கத்திற்கு காரணமாகலானும் ப்ராண நிரோதம் மன நிரோதத்திற்குச் சாதன மென்பதிற் சந்தேகமில்லை.

அதெப்படி ப்ராணனை நிறுத்தினா மனம் நிற்கும்?
அது இரண்டுக்குமே பல விஷயங்கள் பொது. இரண்டும் வாயுவோட அம்சம்; விடாம அலைந்து கொண்டே இருக்கும். இரண்டோட பிறப்பிடமும் ஒண்ணே. அதனாலஒண்ணு ஒடுங்கினா மற்றதும் ஒடுங்கும்.

## விசார சங்கிரஹம் - 17

26.ப்ராண பந்தனம் மனோலயத்திற்கு மாத்திரம் சாதன மாகிறதே யன்றி மனோலயத்திற்கு சாதன மாகாமையான் மனோநாசத்திலேயே தாத்பரியமுடைய விசாரத்திற்கு இது சாதனமா வதெப்படி?
ஆன்ம சாக்ஷாத்காரம் சித்தித்தற்குரிய சாதனங்களை அஷ்டாங்க யோகம் அஷ்டாங்க ஞானமென இரு பிரிவுகளாகச் சுருதிகறிற் கூறியுள்ள படியால் அந்த யோகாஷ்டாங்களி லொன்றாகிய ப்ராணாயாமத்தினாலாவது அல்லது கேவல கும்பகத்தினாலாவது பந்தப்பட்ட மனதை அதோடு விட்டுவிடாமல் மேற்சாதனங்காகிய ப்ரத்யாகார முதலியவற்றில் கிரமமாக பழகி வரின் முடிவில் விசார பல ரூப சொரூப சாக்ஷாத்காரம் பெறுதல் திண்ணம்.

ப்ராணனை ஒடுக்கினா மனசு ஒடுங்குமே தவிர நாசமாகாது இல்லையா? அப்போ நமக்கு மனோநாசத்திற்கு எப்படி அது சாதனமாகும்?

சரிதான். வேதங்களிலே என்ன சொல்லி இருக்குன்னா ஆன்ம சாக்ஷாத்காரம் சித்திக்க உரிய சாதனங்கள் அஷ்டாங்க யோகம், அஷ்டாங்க ஞானம்னு இரண்டு பிரிவுகள். இதில அஷ்டாங்க யோகத்தில ஒண்ணு ப்ராணாயாமம். இதாலேயோ அல்லது வெறும் கும்பகத்தாலேயோ அது மனோநாசத்திற்கு நேரடியா சாதனமாகாது. ஒரு பிடிப்புக்கு வந்த மனசை அப்படியே விடாம அதுக்கும் மேலே ப்ரத்யாகாரம் முதலானவற்றில முறையா பழகி வரணும். அப்படி செய்தா விசாரணையோட பலனா சொரூப சாக்ஷாத்காரம் அடைவது நிச்சயம்.

# விசார சங்கிரஹம் - 18

27.யோகாஷ்டாங்கங்க ளெவை?

இயமம், நியமம், ஆசனம், ப்ராணாயாமம், ப்ரத்யாகாரம், தாரணை, தியானம், சமாதி யென்பனவாம். இவற்றில்
(1) இயமம்: அஹிம்சை, சத்தியம், திருடாமை, பிரமசரியம், அபரிகிரகமாதிய ஒழுக்கமுடைமையாம்.

(2) நியமம்: சௌசம், சந்தோஷம், தவம், ஸ்வாத்யாயம், ஈச்வர பணிதானமாகிய ஒழுக்கமுடைமையாம்.

மோக்ஷாதிகாரிக்குரிய சர்வ சன்மார்க்கங்களின் ப்ராப்பதியே இயம நியமங்களின் தாத்பரியமாம். இவைகளைப்பற்றி விரிவாகயறிய வேண்டின் யோக சூத்ரம், ஹடயோக தீபிகை முதலிய நூல்களிற் காண்க.

(3) ஆசனம்: ஆசன பேதங்கள் 84 வகையாகும். அவற்றில் சிம்ஹம், பத்ரம், பத்மம், சித்தம் ஆகிய விந்நான்குமே சிரேஷ்டமென்றும் இவற்றிலும் சித்தாசனமே மிக சிரேஷ்டமென்றும் யோகசாஸ்திரங்கள் கூறுகின்றன.

(4) ப்ராணாயாமம்: சுருதிகளிற் கூறியுள்ள மாத்திரைக் கணக்கின்படி ப்ராணனை வெளிவிடுவது இரேசக மென்றும் உட்கொள்வது பூரகமென்றும் ஹிருதயத்தில் நிறுத்துவது கும்பகமென்றும் சொல்லப்படும். மாத்திரை யளவுகளைப் பற்றிச் சில சாஸ்திரங்களில் இரேசக பூரகங்களுக்கு சமமும் கும்பகத்திற்கு இரண்டு மடங்கும்; சில சாஸ்திரங்களில் இரேசகத்தைப்போல் பூரகத்திற்கு இரண்டு பங்கும் கும்பகத்திற்கு நான்கு பங்குமென சொல்லப்பட்டிருக்கிறது. மாத்திரை யென்பது காயத்ரி மந்திரத்தை ஒரு முறை யுச்சரிக்கும் காலமாக சொல்லப்படுகிறது. இவ்வித இரேசக பூரக கும்பகங்களடங்கிய ப்ராணாயாமத்தை தன்னாலியன்ற அளவு மிருதுவாகவும், கிரமமாகவும், நாடோறு மப்யசித்து வரின் சரீரத்தில் ஒரு வித இளைப்புடன், சலனமற்று ஆனந்தமாயிருத்தற்கான இச்சை மனதிலுண்டாகும். இதன் பின் ப்ரத்யாகாரம் செய்ய வேண்டும்.

(5)ப்ரத்யாகாரம்: வெளியிலுள்ள நாம ரூபங்களிற் செல்லவொட்டாமல் மனதை ஒருவழிப்படுத்தலாம். இதுகாறும் ஓடியுழன்ற மனது இப்போது ஒருவழிப்பட்டிருத்த லருமை யாதலின் இதற்கு (1) மனோமாத்திர ப்ரணவ த்யானம் (2) புருவ மத்திய நாட்டம் (3) நாசிகாக்ர திருஷ்டி (4) நாதாநுசந்தானம் ஆகியவை சகாயமாம். இப்படி யொருமைப்பட்ட மனம் ஓரிடமேயிருக்க யோக்கிய மானதாகும். இதன்பின் தாரணை செய்ய வேண்டும்.

(6) தாரணை: மனதை தியான யோக்கியமானதோர் ஸ்தானத்திலிருத்துவதாம். ஹ்ருதயமும் ப்ரஹ்ம ரந்திரமுமே தியான யோக்கிய ஸ்தானங்களாம். இவ்விரண்டிடங்களிலுமுள்ள அஷ்டதள பத்மங்களின் மத்தியில் ஆத்ம தேவதா ரூப ப்ரஹ்ம சொரூபமே தீப ஜ்வாலை போலும் ப்ரகாசித்துக் கொண்டிருப்பதாகப் பாவித்து மனதை அதில் ஸ்திரமாய் நிறுத்துவதாம். இதன்பின் தியானம் செய்ய வேண்டும்.

(7) தியானம்: முற்கூறிய அத்தேஜோமய சொரூபத்தினும் தான் வேறில்லையென்று ஸோஹம் பாவனையால் தியானிப்பதாம். இதிலும் எங்குமுள்ள ப்ரஹ்ம சொரூபமே ஆன்ம ரூபமாய் ஹ்ருதயத்தில் புத்தி சாக்ஷியாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கும் என்னும் சுருதியின் படி அங்ஙனமாயிருக்கும் நானார் என்னும் விசாரத்தால் விசாரிக்கில் ஹ்ருதய

கமலத்தில் ஆன்ம தேவதை "அஹம் அஹம்" எனத் தான்றானே ஜ்வலித்துக்கொண்டிருப்பது விளங்கும். இவ்வநுசந்தானரூப தியானமே சிரேஷ்டமாகும். ப்ரஹ்மரந்திரத்திலுள்ளது சஹஸ்ர (1000) தள பத்மமானாலும் அதுவும் 125 சிறுதளங்களுடைய அஷ்டதள பத்ம மேயாம்.

(8) சமாதி:- மேற்கூறிய தியானத்தின் பரிபாகத்தால் தான் இன்னானென்றும் இன்னது செய்கிறோமென்றும் தோன்றாமல் மனது தியான ரூபத்திலேயே லயித்த அல்லது அஹம் அஹம் என்னும் ஸ்புரிப்பு அடங்கிய (சூக்ஷ்மமான) ஸ்திதியே சமாதி யென்பதாம். இதில் நித்திரை மாத்திரம் வராமல் பாதுகாத்துக்கொண்டு தினந்தோறும் விடாமல் கிரமமாக அநுசந்தித்து வந்தால் ஈச்வரன் கூடிய சீக்கிரத்தில் மனோவிசிராந்திரூப சிரேஷ்டமான கதியை அநுகிரஹிப்பார்.

## விசார சங்கிரஹம் - 19

28.ப்ரத்யாகாரத்தில் ப்ரணவத்தை மனோமயமாகத் தியானிக்கச் சொல்லியதின் தாற்பரியமென்ன?

ப்ரணவத்தியானம் செய்யச்சொல்லியதின் தாற்பரிய மிதுவாம். ப்ரணவமென்பது அகார உகார மகார அர்த்தமாத்திரை யென்னும் மூன்றரை மாத்திரைகள் கூடிய ஓங்காரமாம். இவற்றில் அகாரமென்பது ஜாக்ர விச்வஜீவ ஸ்தூல தேகங்களென்றும் உகாரமென்பது ஸ்வப்ன தைஜஸஜீவ சூக்ஷ்ம தேகங்க ளென்றும் மகார மென்பது சுழுப்தி பிராஜ்ஞ ஜீவ காரண தேகங்களென்றும் அர்த்த மாத்திரை யென்பது துரியம் அல்லது அஹம் சொரூப மென்றும் இதற் கப்பாற்பட்ட நிலை துரியாதீதமாகிய ஆநந்த மாத்திர சொரூப மென்றும் சொல்லப்படும். முன் தியானத்திற் கூறிய இந்நான்காவதான அஹம் சொரூபமே மற்ற அகார உகார மகாரங்களென்னும் மூன்று மாத்திரைக ளடங்கியுள்ள அமாத்திரை சொரூப மென்றும் மௌனாக்ஷர மென்றும் அஜபை யென்றும் ஜபியாமல் ஜபித்தலென்றும் பஞ்சாக்ஷராதி மந்திரங்களின் சாரமான அத்வைத மந்திர மென்றும் கூறப்படும். இவ்வெதார்த்த அர்த்தம் சித்தித்தற்பொருட்டே ப்ரணவத் தியானம் செய்யப்படுவதாம். இந்த ஆத்மாநுசந்தான பக்திரூப தியானத்தின் பரிபாக அவஸ்தையையே சமாதி யெனப்பட்டு நிரதிசயாநந்த மோக்ஷ கதியைக் கொடுக்கும். பெரியோர்களும் ஸ்வாத்மாநுசந்தான ரூப பக்தி யொன்றினாலேயே மோக்ஷமடைய வேண்டும் எனக்கூறியிருக்கின்றனர்.

நாம ரூபங்களிலே மனசை போக விடாம ஒரு முகப்படுத்த சொன்னதிலே ப்ரணவத்தை மனோமயமாகத் தியானிக்க சொல்லியிருக்கே, அதோட தாத்பரியமென்ன?

ப்ரணவத்தியானம் செய்யச் சொல்லியதோட தாத்பரியம் இதான்: ப்ரணவமென்கிறது என்ன? அ உ ம ன்னு 3 எழுத்துக்கள். அப்புறம் எழுத்தில்லாம பாதி மாத்திரை. இதெல்லாம் சேர்ந்த ஓங்கார சப்தம். இவற்றில அகாரம் என்பது ஜாக்ரத், விச்வஜீவன், ஸ்தூல தேகம். உகாரமென்பது ஸ்வப்னம், தைஜஸன், ஜீவ சூக்ஷ்ம தேகம். மகாரம் என்பது சுழுப்தி, பிராஜ்ஞன், ஜீவ காரண தேகம். அர்த்த மாத்திரை என்பது துரியம் அல்லது அஹம் சொரூபம். (இதெல்லாம் ஞான வழி முதல் பாகத்திலே இருக்கு. மறந்து போயிருந்தா தேடிப்பாருங்க!) இதற்கு அப்பாற்பட்ட நிலை துரியாதீதம். ஆநந்த மாத்திர சொரூபம் ன்னும் சொல்லுவாங்க.

முன் தியானத்திலே சொன்ன இந்த நான்காவதான அஹம் சொரூபம் என்னன்னா, மத்த அகார உகார மகாரங்கள் என்னும் மூன்று மாத்திரைகள் அடங்கியுள்ள அமாத்திரை (கால அளவுக்குள்ளே வராத) சொரூபம். மௌனாக்ஷர மென்றும், அஜபை யென்றும், ஜபியாமல் ஜபித்தலென்றும், பஞ்சாக்ஷராதி மந்திரங்களின் சாரமான அத்வைத மந்திர மென்றும் சொல்கிறாங்க. இந்த எதார்த்த அர்த்தம் சித்திக்கனும்னே ப்ரணவத் தியானம்

செய்யப்படுகிறது. இந்த ஆத்மாநுசந்தான, பக்தி ரூப தியானத்தின் பலனான, பக்குவமான நிலையே சமாதி எனப்பட்டு, நிரதிசய ஆநந்த மோக்ஷ கதியைக் கொடுக்கும். பெரியோர்களும் ஸ்வ ஆத்ம அநுசந்தான ரூப பக்தி ஒன்றினாலேயே மோக்ஷமடைய வேண்டும் ன்னு சொல்லி இருக்காங்க.

## விசார சங்கிரகம் -20

29.தியானத்தில் தீப ஜ்வாலைபோல் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் தேஜோமய சொரூபத்தினும் தான் வேறில்லை யென்று ஸோஹம் பாவத்துடன் தியானிக்கக் கூறியதின் தாற்பர்யமென்ன?

(அ) தேஜோமயத்திலும் தான் வேறில்லையென்று பாவிக்கக்கூறியதன் தாற்பரியமிதுவாம் சுருதிகளில் தியான லக்ஷணத்தைப் பற்றி கைலாசம் வைகுண்டம் பரமபத மென்பனவாகக் கூறப்படுகிற அஷ்டதளத்தோடுங் கூடிய சர்வாத்மகமான ஹ்ருதய கமல மத்தியில் அங்குஷ்ட மாத்ர பரிமாணமாய் மின்னலைப்போற் காந்தியுள்ளதாய் தீபஜ்வாலைபோலும் ப்ரகாசிக்கும் அவ்வஸ்துவைத் தியானித்து புருஷன் அமிர்தத்வத்தை அடைகிறான் என்று கூறியிருத்தலால் இதிலிருந்து தான் வேறு அது வேறு என்ற பேத பாவமும் பின்னத்யானமும் வஸ்துவில் பரிச்சின்ன புத்தியும் ஏகதேச புத்தியுமாகிய தோஷங்கள் சம்பவியாதிருத்தற் பொருட்டாம்.

(ஆ) ஸோஹம் பாவத்துடன் தியானிக்கக்கூறியதன் தாற்பரிய மிதுவாம் ஸ + அஹம் ஸோஹம் ஸ பரமாத்மா அஹம் நானென விளங்கும் ஆத்மா. பிரமபுரமென்னும் தேகமாகியபட்டணத்தில் ஹ்ருதய கமலாசனத்தில் வசிக்கும் ஜீவனாகிய சிவலிங்கத்தை அதாவது தன்னை தேகாதிகளை தானென்று வெளிமுகத்திற் சஞ்சரிக்கும் அகங்கார ரூப மனதை ஹ்ருதயத்திலடக்கி தேகாதிகளிலுள்ள அஹம் பாவம் நீங்கி தேகத்திலிருக்கும் நானார் என்ற விசாரத்தோடும் நிச்சலமாக இருந்தபடியிருந்து விசாரிக்குங்கால் அங்கு அஹம் அஹம் என்று சூக்ஷ்மமாக ஸ்புரித்துக் கொண்டிருக்கும் ஆத்ம சொரூபமே எல்லாமா யல்லாவுமாய் பாஹ்யாந்தர பேதமின்றி எங்கும் விளங்கும் பரமாத்ம சொரூபமாக லானும் அந்த ப்ரஹ்மமே நான் என்பதன் பொருளாய் விளங்கலானும் அதை தன் மயமாக பாவிக்கின் அறியாமை நீங்காதாகலான் அங்ஙனம் பாவிக்கக் கூறியதாம். வெகு காலம் இவ்வாத்மாநுசந்தானடாகிற ஸோஹம் பாவனையால் நிரந்தரம் வஸ்துவை நிச்சலமாய் த்யானித்து வந்தால் ஹ்ருதயத்திலுள்ள அஞ்ஞான அந்தகாரமும் அஞ்ஞான தற்காரியங்களான ஸர்வ ப்ரதிபந்தங்களும் நீங்கி பரிபூரண ஞானம் லப்த மாகும்.

சிந்தனை புறஞ்செலாச் சிவோகம் பாவனை சந்தத முஞற்றிடின் சமாதி வந்துறும் -வள்ளலார்.

இங்ஙனம் தேகமாகிய பட்டணத்தில் ஹ்ருதய குஹையிலிருக்கும் வஸ்துவையறிதலே ஸர்வ பரிபூரணமாயிருக்கும் ஈச்வரனை அறிதலாம். நவத்வாரங்களுடன் கூடிய தேகமாகிய புரியில் ஞானி சுகமாய் வசிப்பன். தேகமே ஆலயம் ஜீவனே சிவன். அவனை ஸோஹம் பாவனையால் பூஜிக்கின் முக்தியுண்டாம். பஞ்சகோசாத்மக தேகமே குஹை அதில் வசிக்கும் பரமே குஹேசன் என்று சுருதிகளும் கூறுகின்றன. ஆத்மாவே ஸர்வ தியானங்களிலும் தானாகிய ஆத்மத்யானமே சர்வ சிரேஷ்டமாம். மற்ற த்யானங்க ளனைத்தும் இதில அந்தர்பூத மாகலானும் இது ஸித்தியானால் மற்றவை தேவையில்லை. தன்னை அறிவதே கடவுளை அறிவதாகும் தியானிக்கும் தன்னை யறியாமல் இதரமாய் தெய்வமிருக்கிறதென்றென்னி த்யானிப்பது தனது நிழலைக்காலால் அளத்தற்கு சமானம் என்றும் கையிலிருக்கும் அத்ய பூர்வமான கௌஸ்துப ரத்தினத்தை தூர எறிந்துவிட்டு மிக அற்பமான சங்குமணி தேடுதற்குச் சமான

மென்றும் பெரியோர் கூறுகின்றனர்.

தியானத்தில் தீப ஜ்வாலை போல் ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் தேஜோமய சொரூபத்தை விட்டு தான் வேறு இல்லை என்று ஸோஹம் பாவத்துடன் தியானிக்கக் கூறியதின் தாத்பர்யமென்ன?

(அ) தேஜோமயத்திலும் தான் வேறில்லையென்று பாவிக்கக்கூறியதன் தாத்பரியம் இதுதான்: சுருதிகளில் தியான லக்ஷணத்தைப் பற்றி கைலாசம், வைகுண்டம், பரமபதம் என்பனவாகக் பலவிதமா சொல்லப்படுகிற எட்டு இதழ்களோட கூடிய சர்வ ஆத்மகம் ஆன ஹ்ருதய தாமரை மத்தியிலே கட்டைவிரல் அளவே மின்னலைப் போல காந்தியுள்ளதாய், தீப ஜ்வாலை போலும் ப்ரகாசிக்கிற அந்த வஸ்துவைத் தியானித்து புருஷன் அழியா தன்மையை அடைகிறான் என்று கூறியிருக்கிறதால; இதிலிருந்து தான் வேறு, அது வேறு என்ற வித்தியாச பாவமும், வேறு வகையாக த்யானமும், வஸ்துவை பலதாக பார்க்கும் புத்தியும், ஏகதேசபுத்தியுமாகிய தோஷங்கள் சம்பவிக்காம இருக்கணும் என்றே.
--
(ஆ) ஸோஹம் பாவத்துடன் தியானிக்கக்கூறியதன் தாத்பரியம் இதுவாம்: ஸ + அஹம் = ஸோஹம் ஸ = பரமாத்மா; அஹம் = நான் என விளங்கும் ஆத்மா. உடம்பை பிரமபுரமென்னும் பட்டணம் ந்னு சொன்னா, ஹ்ருதயம் கமலாசனம். அங்கே வசிக்கிற ஜீவனாகிய சிவலிங்கம் எதுன்னா , தேகம் முதலானதை தான்னு நினைச்சு வெளிமுகமா சஞ்சரிக்கும் அகங்கார ரூபமான மனசு. இந்த மனசை ஹ்ருதயத்திலே அடக்கி, தேகம் முதலானதில இருக்கிற நான் என்கிற பாவத்தை நீங்கி, தேகத்தில இருக்கிற நான் யார் என்கிற விசாரத்தோட, அசைவில்லாம இருந்தபடி இருந்து விசாரிக்கிறப்ப அங்க “அஹம், அஹம்” ந்னு கண்ணுக்கு தெரியாதபடி துடிக்கிற ஆத்ம சொரூபமே எல்லாமாயும் எல்லாம் இல்லாமாயும் வெளி உள் வித்தியாசமில்லாமல் எங்கும் விளங்கும் பரமாத்ம சொரூபமாக ஆவதால, அந்த ப்ரஹ்மமே நான் என்பதன் பொருளாய் விளங்குகிறதாலேயும்; அதை தன் – உடம்பு, மனம் - மயமாக பாவித்தால் அறியாமை நீங்காது என்பதால் அப்படி பாவிக்கச் சொன்னாங்க.
வெகு காலம் இந்த ஆத்மா அநுசந்தானம் ஆகிற ஸோஹம் பாவனையால நிரந்தரம் வஸ்துவை நிச்சலமாய் த்யானித்து வந்தா, ஹ்ருதயத்திலுள்ள அஞ்ஞான அந்தகாரமும் அஞ்ஞான தற்காரியங்களான ஸர்வ ப்ரதிபந்தங்களும் நீங்கி பரிபூரண ஞானம் கிடைக்கும்.

சிந்தனை புறம் செலா சிவோகம் பாவனை சந்ததமுஞற்றிடின் சமாதி வந்துறும் -வள்ளலார்.

இப்படி தேகமாகிய பட்டணத்தில் ஹ்ருதய குஹையில் இருக்கும் வஸ்துவை அறிதலே ஸர்வ பரிபூரணமாக இருக்கும் ஈச்வரனை அறிதலாம்.
நவத்வாரங்களுடன் கூடிய தேகமாகிய புரியில் ஞானி சுகமாய் வசிப்பன். தேகமே ஆலயம் ஜீவனே சிவன். அவனை ஸோஹம் பாவனையால் பூஜிக்கின் முக்தியுண்டாம். பஞ்சகோச ஆத்மக தேகமே குஹை; அதில் வசிக்கும் பரமே குஹேசன் என்று சுருதிகளும் கூறுகின்றன. ஆத்மாவே ஸர்வ தியானங்களிலும் தானாகிய ஆத்ம த்யானமே சர்வ சிரேஷ்டமாம். மற்ற த்யானங்கள் அனைத்தும் இதில அடங்கும். இது ஸித்தியானால் மற்றது எதுவும் தேவையில்லை. தன்னை அறிவதே கடவுளை அறிவதாகும். தியானிக்கும் தன்னை அறியாமல் இதரமாய் தெய்வம் இருக்கிறது என்று எண்ணி த்யானிப்பது தனது நிழலைக் காலால் அளத்தற்கு சமானம் என்றும், கையிலிருக்கும் கௌஸ்துப ரத்தினத்தை தூர எறிந்துவிட்டு மிக அற்பமான சங்குமணி தேடுதற்குச் சமானம் என்றும் பெரியோர் கூறுகின்றனர்.

## விசார சங்கிரகம் -21

30.ஹ்ருதயமும் ப்ரஹ்மரந்திரமுமே தியான ஸ்தானங்களெனினும் அவசியமாயின் ஆறாதார தரிசனைகளையுங் கொள்ளலாமா?

தியான ஸ்தானங்களாக கொள்ளப்படும் ஆறாதார முதலியவனைத்தும் கற்பனைகளேயாம். இவையாவும் ஆரம்ப யோகிகளுக்கே உரியன. ஆறாதார தரிசனைகளைப்பற்றி நம்மை சிருஷ்டி திதி சங்காரங்கள் செய்யும் அத்வைத பரிபூரண ஞான சொரூப ஆன்மாவாகிற கடவுளை கணபதி ப்ரஹ்மா விஷ்ணு உருத்திரன் மஹேச்வரன் சதாசிவனாதிய நாம ரூபங்களாக பாவனையாலுண்டாக்கிக் கெடுப்பது மஹா பாவமே என்று சிவ யோகிகளும் அவையனைத்தும் கற்பனைகளே என்று வேதாந்திகளும் கூறுகின்றனர். ஆகவே எல்லாவற்றையும் அறியும் ஞான சொரூபமாகிற தன்னையறிந்தால் எல்லாமறிந்ததாகும். யாதொன் றிருந்த படியறிய அறியாவெல்லா மறிந்தனவாம் என்று பெரியோருங் கூறியிருக்கின்றனர். நாநாபாவனையோடுங் கூடியுள்ள நாம் கடவுளாகிய ஆன்மாவை பாவித்து வந்தால் அந்த ஏக பாவனையால் அநேக பாவனைகள் நீங்கி முன்னுள்ள ஏக பாவனையும் நசிக்கும். இதுவே தன்னை அல்லது கடவுளை யறிவதாம். இதுவே முக்தி.

தியான ஸ்தானங்களாக கொள்ளப்படும் ஆறு ஆதார ஸ்தானங்கள் முதலியன அனைத்தும் கற்பனைகளேயாம். இவை யாவும் ஆரம்ப யோகிகளுக்கே உரியன. ஆறு ஆதார தரிசனைகளைப்பற்றி சொல்லும் போது: நம்மை சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரங்கள் செய்யும் அத்வைத பரிபூரண ஞான சொரூப ஆன்மாவாகிற கடவுளை கணபதி, ப்ரஹ்மா, விஷ்ணு, உருத்திரன், மஹேச்வரன் சதாசிவன் ஆதிய நாம ரூபங்களாக பாவனையால் உண்டாக்கிக் கெடுப்பது மஹா பாவமே என்று சிவ யோகிகளும்; அவை அனைத்தும் கற்பனைகளே என்று வேதாந்திகளும் கூறுகின்றனர். ஆகவே எல்லாவற்றையும் அறியும் ஞான சொரூபமாகிற தன்னை அறிந்தால் எல்லாம் அறிந்ததாகும். "யாது ஒன்று இருந்த படி அறிய, அறியா எல்லாம் அறிந்தனவாம்" என்று பெரியோரும் கூறியிருக்கின்றனர். நாநா வித பாவனையோடும் கூடியுள்ள நாம் கடவுளாகிய ஆன்மாவை பாவித்து வந்தால் அந்த ஏக பாவனையால் அநேக பாவனைகள் நீங்கி முன்னுள்ள ஏக பாவனையும் நசிக்கும். இதுவே தன்னை அல்லது கடவுளை அறிவதாம். இதுவே முக்தி.

## விசார சங்கிரகம் -22

31.ஆன்மாவை பாவிப்ப தெப்படி?

ஆன்மா இருட்டும் பிரகாசமும் மல்லாத சுயஞ்ஜோதியாய் தன்மயமாய்த் தனக்குத் தானே ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் வஸ்துவாகலான் அதை இப்படியென்றும் அப்படியென்றும் பாவித்தல் கூடாது. பாவிக்கும் நினைப்பே பந்தமாக முடியும். மனதை ஆன்மாகார மாக்குவதே ஆன்ம பாவத்தின் தாற்பரியமாம். ஹ்ருதயமென்னும் குகையின் மத்தியில் கேவல ப்ரஹ்மமே நான் நான் என்று ப்ரத்யக்ஷமாய் ஆன்ம ரூபமாகப் பிரகாசித்துக் கொண்டிருத்தலை அறியாது ஆன்மாவை பல விதங்களாகப் பாவிப்பதினும் அறியாமை வேறுண்டோ?

ஆன்மா இருட்டும் பிரகாசமும் அல்லாத சுயம் ஜோதியாய், தன் மயமாய், தனக்குத் தானே ப்ரகாசித்துக் கொண்டிருக்கும் வஸ்து. ஆதலால் அதை இப்படியென்றும் அப்படியென்றும் பாவித்தல் கூடாது. பாவிக்கும் நினைப்பே கட்டுப்பாடு செய்வதாக முடியும். மனதை ஆன்மாகாரம் ஆக்குவதே ஆன்ம பாவத்தின் தாற்பரியமாம். ஹ்ருதயம் என்னும் குகையின் மத்தியில் ப்ரஹ்மம் மட்டுமே நான் நான் என்று ப்ரத்யக்ஷமாய் ஆன்ம ரூபமாகப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இதை அறியாது ஆன்மாவை பல விதங்களாகப் பாவிப்பதை விட அறியாமை வேறுண்டோ? [பாவிப்பதை விட்டு இதை "பார்க்க" கற்றுக்கொள்ள வேண்டும்.]

# விசார சங்கிரகம் -23

32.ஹ்ருதயத்தில் நான் நான் என்று ஆன்ம ரூபமாக ஸ்புரித்துக்கொண்டிருக்கிறது என்ற ப்ரஹ்ம நிலையை எளிதிற் போதமாகுமாறு இன்னும் சற்று விளக்கமாக விஸ்தரித்துக் கூறுதல் கூடுமா?

சுழுத்தி மூர்ச்சையாகிய காலங்களில் எவ்வித ஞானமும் அதாவது தன் ஞானமோ அன்னிய ஞானமோ அற்பமுமின்றென்பது எவருக்குமவநுபவமன்றோ? பின்னர் "தூக்கத்தினின்றும் விழித்தேன், மயக்கத்தினின்றுந் தெளிந்தேன்" என்ற அனுபவம் முற்கூறிய நிர்விசேஷ நிலையின்றுதித்ததோர் விசேஷ ஞானத்தின் தோற்றமன்றோ? இவ்விசேஷ ஞானமே விஞ்ஞானமெனப்படுகிறது. இவ்விஞ்ஞானமானது ஆன்மாவையேனும் அனான்மாவையேனும் ஆஸ்ரயித்தே விளங்குமல்லாது தனியாகப் பிரகாசிக்காது. இது ஆன்மாவை ஆஸ்ரயிக்கும்போது மெய்ஞானம், ஆன்மாகார மனோவிருத்தி ஞானம், அகண்டாகார ஞானமென்றும் அனான்மாவை ஆஸ்ரயிக்கும்போது அஞ்ஞானமென்றும் சொல்லப்படுகிறது. இவ்விஞ்ஞானம் ஆன்மாவை ஆஸ்ரயித்து ஆன்மாகாரமாக விளங்கும் ஸ்திதியே 'அஹம் ஸ்புரிப்பு' எனச்சொல்லப்படுகிறது. இந்த ஸ்புரிப்பு வஸ்துவை விட்டுத் தனியாக இராது. இந்த ஸ்புரிப்பே வஸ்துவை அபரோக்ஷப் படுத்தற்கான தக்க குறியாம். என்றாலும் இதுவே வஸ்து நிலை ஆகாது. இந்த ஸ்புரிப்பானது எதனை ஆஸ்ரயித்து விளங்குகிறதோ அந்த மூலமே வஸ்து அல்லது ப்ரஜ்ஞானம் எனப்படும். வேதாந்தம் 'ப்ரஜ்ஞானம் ப்ரஹ்மம்' என்றது இது பற்றியேயாம்.
இதனை

நிகழ்சுயஞ் சோதியாகி நிகில சாட்சியுமா மான்மா
புகலும்விஞ் ஞான கோசம் பொருந்தியே விளங்குமென்றும்
இகழ்விலா விவ்வான் மாவை யிலக்கிய மாகப்பற்றி
அகமென வனுபவிப்பா யகண்டமாம் விருத்தி யாலே
-(விவேக சூடாமணி)

என்னும் சுருதியின் தாத்பரியத்தானுந்தெளிக.

ஹ்ருதயத்தில் நான் நான் என்று ஆன்ம ரூபமாக ஸ்புரித்துக்கொண்டிருக்கிறது என்ற ப்ரஹ்ம நிலையை எளிதிற் விளங்குமாறு இன்னும் சற்று விளக்கமாக விஸ்தரித்துக் கூறுதல் கூடுமா?

சுழுத்தி, மூர்ச்சை ஆகிய காலங்களில் எவ்வித ஞானமும் - அதாவது தன் ஞானமோ அன்னிய ஞானமோ - அற்பமும் இல்லை என்பது எவருக்குமவநுபவமன்றோ? பின்னர் "தூக்கத்தினின்றும் விழித்தேன், மயக்கத்தினின்றும் தெளிந்தேன்" என்ற அனுபவம் முன்னே சொன்ன நிர்விசேஷ நிலையிலிருந்து உதித்த ஓர் விசேஷ ஞானத்தின் தோற்றம் அன்றோ? இந்த விசேஷ ஞானமே விஞ்ஞானம் எனப்படுகிறது. இந்த விஞ்ஞானமானது ஆன்மாவையாவது அனான்மாவையாவது சார்ந்தே விளங்கும். அப்படி அல்லாது தனியாகப் பிரகாசிக்காது. இது ஆன்மாவை சார்ந்திருக்கும் போது "மெய்ஞானம், ஆன்மாகார மனோவிருத்தி ஞானம், அகண்டாகார ஞானம்" என்றும் அனான்மாவை சார்ந்திருக்கும் போது அஞ்ஞானம் என்றும் சொல்லப்படுகிறது. இந்த விஞ்ஞானம் ஆன்மாவை சார்ந்து ஆன்மாகாரமாக விளங்கும் ஸ்திதியே 'அஹம் ஸ்புரிப்பு' எனச் சொல்லப்படுகிறது. இந்த ஸ்புரிப்பு வஸ்துவை விட்டுத் தனியாக இராது. இந்த ஸ்புரிப்பே வஸ்துவை மறைவிலிருந்து நீக்க தக்க குறியாம். என்றாலும் இதுவே வஸ்து நிலை ஆகாது. இந்த ஸ்புரிப்பானது எதனை சார்ந்து விளங்குகிறதோ அந்த மூலமே வஸ்து அல்லது ப்ரஜ்ஞானம் எனப்படும். வேதாந்தம் 'ப்ரஜ்ஞானம் ப்ரஹ்மம்' என்றது இது பற்றியேயாம்.

இதனை

நிகழ் சுயம் சோதி ஆகி நிகில சாட்சியும் ஆன்மா
புகலும் விஞ்ஞான கோசம் பொருந்தியே விளங்குமென்றும்
இகழ்வு இலா இவ் ஆன்மாவை இலக்கியமாகப் பற்றி
அகம் என அனுபவிப்பாய் அகண்டமாம் விருத்தியாலே
(- விவேக சூடாமணி)

என்னும் வேதத்தின் தாத்பரியத்தாலும் தெளிக.

## விசார சங்கிரகம் -24.

33.ஆந்தர பூஜை அல்லது நிர்குண பூஜை யென்பதென்ன?

நிர்குண பூஜையைப்பற்றி ரிபுகீதை முதலிய நூல்களில் விரிவாகக் கூறப்பட்டிருந்தாலும் சர்வ யக்ஞ, தான, தப, வ்ரத, ஜப, யோக பூஜைகளும் அஹம் ப்ரஹ்மம் என்னும் தியானமே யாகலான் சர்வ பிரகாரத்தாலும் "அஹம் ப்ரஹ்ம" பாவனையை எப்போதும் விடாதிருக்க வேண்டு மென்பதே நிர்குண பூஜையின் தாற்பரியம்.

நிர்குண பூஜையைப்பற்றி ரிபுகீதை முதலிய நூல்களில் விரிவாகக் கூறப்பட்டிருந்தாலும் எல்லா யக்ஞ, தான, தப, வ்ரத, ஜப, யோக பூஜைகளும் " அஹம் ப்ரஹ்மம்" என்னும் தியானமே ஆதலால், எல்லா வழியாலும் "அஹம் ப்ரஹ்ம" பாவனையை எப்போதும் விடாதிருக்க வேண்டும் என்பதே நிர்குண பூஜையின் தாத்பரியம்.

## விசார சங்கிரகம் -25

34.ஞானாஷ்டாங்கங்க ளெவை?

இயம் நியமமாதிகளாகிய முற்கூறிய அவ்வெட்டுமாம். இவற்றில்
1.இயமம்: தேகாதி ப்ரபஞ்ச விஷயங்களிலுள்ள தோஷங்களை தெரிந்து இந்திரிய சமூகங்களை அடக்குதல்.
2. நியமம்: சஜாதீய விருத்தியின் ப்ரவாகமும் விஜாதீய விருத்தியின் திரஸ்காரமுமாம். அதாவது பரமாத்மாவின் கண் இடையறா துண்டாகும் அன்பு.
3.ஆசனம்: எதனிடத்து இடைவிடாத ப்ரஹ்ம சிந்தனம் சுகமாகவுண்டாகுமோ அஃதாசனம்.
4,ப்ராணாயாமம்: தேகாதி ப்ரபஞ்ச விஷயங்களின் நாமரூப மென்ற அசத்தான இரண்டம்சங் களையும் நீக்குதல் இரேசகமும் அவைகளில் அனுசூதமா யிருக்கும் ஸத் சித், ஆனந்தமென்ற சத்தான மூன்றம்சங்களையும் கிரகித்தல் பூரகமும், அங்ஙனம் கிரகித்த அம்சங்களை உள்ளிருத்தல் கும்பகமுமாம்.
5.பிரத்யாகாரம்: முன் நீக்கிய நாமரூபங்கள் மனதிற்கலவாது காத்தல்.
6.தாரணை: அஸ்தி, பாதி, ப்ரியரூபமே தானாகிய ஆத்மசொரூபமென்று மனதை வெளி நாடாது ஹிருதயத்தில் நிறுத்தல்.
7.தியானம்: "சின்மாத்ர வடிவே நாம்" என்று சிந்தித்திருத்தல், அதாவது முற்கூறியபடி பஞ்சகோசாத்மகமான சரீரத்தை நானல்ல வென்று அப்படியே யிருத்தி நானாரென்று விசாரிக்க, அங்கு தான்றானாய் ஸ்புரித்துக் கொண்டிருக்கும் அஹம் சொரூபமாய் இடையறாதிருத்தல்.
8.சமாதி: முற்கூறிய அஹம் ஸ்புரிப்பும் அடங்கிய சூக்ஷ்மமான சாக்ஷாத்கார நிலையாம்.

இவ்வித ப்ராணாயாமாதிகளுக்கு, முன் யோகப் பிரிவிற் கூறிய ஆசனாதி நியமங்கள் வேண்டுவதின்று. எங்கிருந்தாலும் எப்போதும் செய்யலாம். யோகம், ஞானம் ஆகிய இவ்விரண்டில் தனக்கு பிரியமாகத் தோன்றுவதையாவது அல்லது இரண்டையுமேயாவது அனுஷ்டிக்கலாம். மறதியே சர்வ அனர்த்தங்களுக்கும் மூலமென்றும் முமுக்ஷுக்களுக்கு காலனென்றும் பெரியோர் கூறுவதால் எவ்விதத்திலேனும் ஆன்ம சொரூபமாகிய தன்னிடத்தில் மனதை நிறுத்தி எப்போதும் தன்னை மறவாதிருக்க வேண்டுமென்பதே முக்கிய தாற்பரியம். மனமொன் றடங்கினால் எல்லாங் கைவந்ததாகும். இந்த யோக அஷ்டாங்கப் பிரிவுகளும் அவற்றின் விவரங்களும் சாஸ்திரங்களில் விஸ்தாரமாக கூறப்பட்டிருத்தலால் இங்கு வேண்டிய அளவு சுருக்கி கூறப்பட்டது.

ஞான அஷ்ட அங்கங்கள் எவை?
இயம் நியமம் ஆதிகள் ஆகிய முற்கூறிய அவ்வெட்டுமாம். இவற்றில்
1. இயமம்: தேகம் முதலான ப்ரபஞ்ச விஷயங்களிலுள்ள குற்றங்களை தெரிந்து இந்திரிய கூட்டங்களை அடக்குதல்.
2. நியமம்: சஜாதீய விருத்தியின் ப்ரவாகமும் விஜாதீய விருத்தியின் நிராகரிப்புமுமாம். அதாவது பரமாத்மாவின் கண் இடையறாது உண்டாகும் அன்பு.
3. ஆசனம்: எதனிடத்து இடைவிடாத ப்ரஹ்ம சிந்தனம் சுகமாக அமருமோ அதுவே ஆசனம்.
4. ப்ராணாயாமம்: தேகம் முதலான ப்ரபஞ்ச விஷயங்களின் நாமம், ரூபம் என்ற அசத்தான இரண்டு அம்சங்களையும் நீக்குதல் இரேசகம்; அவைகளில் உள் இருக்கும் மாறாத ஸத், சித், ஆனந்தம் என்ற சத்தான மூன்று அம்சங்களையும் கிரகித்தல் பூரகம், அப்படி கிரகித்த அம்சங்களை உள் இருத்தல் கும்பகமாம்.
5. பிரத்யாகாரம்: முன் நீக்கிய நாமரூபங்கள் மனதில் கலவாது காத்தல்.
6. தாரணை: அஸ்தி (இருக்கிறது), பாதி (ப்ரகாசிக்கிறது), ப்ரிய ரூபமே தானாகிய ஆத்ம சொரூபம் என்று கருதி, மனதை வெளி நாடாது ஹிருதயத்தில் நிறுத்தல்.
7. தியானம்: "சின்மாத்ர வடிவே நாம்" என்று சிந்தித்திருத்தல், அதாவது முற்கூறியபடி பஞ்ச கோச ஆத்மகமான சரீரத்தை நானல்ல என்று அப்படியே இருத்தி நான் யாரென்று விசாரிக்க, அங்கு தான் தானாய் ஸ்புரித்துக் கொண்டிருக்கும் அஹம் சொரூபமாய் இடையறாது இருத்தல்.
8. சமாதி: முற்கூறிய அஹம் ஸ்புரிப்பும் அடங்கிய சூக்ஷ்மமான சாக்ஷாத்கார நிலையாம்.
இவ்வித ப்ராணாயாமாதிகளுக்கு, முன் யோகப் பிரிவில் கூறிய ஆசனாதி நியமங்கள் வேண்டுவது இல்லை. எங்கிருந்தாலும் எப்போதும் செய்யலாம். யோகம், ஞானம் ஆகிய இவ்விரண்டில் தனக்கு பிரியமாகத் தோன்றுவதையாவது அல்லது இரண்டையுமேயாவது அனுஷ்டிக்கலாம். மறதியே எல்லா அனர்த்தங்களுக்கும் மூலம் என்றும் முமுக்ஷுக்களுக்கு காலனென்றும் பெரியோர் கூறுவதால் எவ்விதத்திலேனும் ஆன்ம சொரூபமாகிய தன்னிடத்தில் மனதை நிறுத்தி எப்போதும் தன்னை மறவாதிருக்க வேண்டுமென்பதே முக்கிய தாற்பரியம். மனமொன்று அடங்கினால் எல்லாம் கை வந்ததாகும். இந்த யோக அஷ்டாங்கப் பிரிவுகளும் அவற்றின் விவரங்களும் சாஸ்திரங்களில் விஸ்தாரமாக கூறப்பட்டிருத்தலால் இங்கு வேண்டிய அளவு சுருக்கி கூறப்பட்டது.

## விசார சங்கிரகம் -25

### 28.ப்ரத்யாகாரத்தில் ப்ரணவத்தை மனோமயமாகத் தியானிக்கச் சொல்லியதின் தாற்பரியமென்ன?

ப்ரணவத்தியானம் செய்யச்சொல்லியதின் தாற்பரிய மிதுவாம். ப்ரணவமென்பது அகார உகார மகார அர்த்தமாத்திரை யென்னும் மூன்றரை மாத்திரைகள் கூடிய ஓங்காரமாம். இவற்றில் அகாரமென்பது ஜாக்ர விச்வஜீவ ஸ்தூல தேகங்களென்றும் உகாரமென்பது ஸ்வப்ன தைஜஸஜீவ சூக்ஷ்ம தேகங்க ளென்றும் மகார மென்பது சுழுப்தி பிராஜ்ஞ ஜீவ காரண தேகங்களென்றும் அர்த்த மாத்திரை யென்பது துரியம் அல்லது அஹம் சொரூப

மென்றும் இதற் கப்பாற்பட்ட நிலை துரியாதீதமாகிய ஆநந்த மாத்திர சொரூப மென்றும் சொல்லப்படும். முன் தியானத்திற் கூறிய இந்நான்காவதான அஹம் சொரூபமே மற்ற அகார உகார மகாரங்களென்னும் மூன்று மாத்திரைக ளடங்கியுள்ள அமாத்திரை சொரூப மென்றும் மௌனாக்ஷர மென்றும் அஜபை யென்றும் ஜபியாமல் ஜபித்தலென்றும் பஞ்சாக்ஷராதி மந்திரங்களின் சாரமான அத்வைத மந்திர மென்றும் கூறப்படும். இவ்வெதார்த்த அர்த்தம் சித்தித்தற்பொருட்டே ப்ரணவத் தியானம் செய்யப்படுவதாம்.இந்த ஆத்மாநுசந்தான பக்திரூப தியானத்தின் பரிபாக அவஸ்தையே சமாதி யெனப்பட்டு நிரதிசயாநந்த மோக்ஷ கதியைக் கொடுக்கும். பெரியோர்களும் ஸ்வாத்மாநுசந்தான ரூப பக்தி யொன்றினாலேயே மோக்ஷமடைய வேண்டும் எனக்கூறியிருக்கின்றனர்.

28.நாம ரூபங்களிலே மனசை போக விடாம ஒரு முகப்படுத்த சொன்னதிலே (ப்ரத்யாகாரத்தில) ப்ரணவத்தை மனோ மயமா ஏன் தியானிக்கச் சொன்னாங்க?
ப்ரணவத்தியானம் செய்யச்சொல்லியதின் காரணம் இதான்: ப்ரணவமென்கிறது என்ன? அ உ ம ன்னு 3 எழுத்துக்கள். அப்புறம் எழுத்தில்லாம பாதி மாத்திரை. இதெல்லாம் சேர்ந்தது ஓங்கார சப்தம்.
இவற்றில:
அகாரம் என்பது ஜாக்ர, விச்வ, ஜீவ ஸ்தூல தேகங்கள்
உகாரம் ஸ்வப்ன, தைஜஸ, ஜீவ சூக்ஷ்ம தேகங்கள்
மகாரம் சுழுப்தி, பிராஜ்ஞ, ஜீவ காரண தேகங்கள்
அர்த்த மாத்திரை என்பது துரியம் அல்லது அஹம் சொரூபம். (இதெல்லாம் ஞான வழி முதல் பாகத்திலே இருக்கு. மறந்து போயிருந்தா தேடிப்பாருங்க!)
இதற்கு அப்பாற்பட்ட நிலை துரிய அதீதம் (துரியத்தை தாண்டியது) ஆகிய ஆநந்த மாத்திர சொரூபம் என்றும் சொல்லப்படும்.
முன் தியானத்திலே சொன்ன இந்த நான்காவதான அஹம் சொரூபம் என்னன்னா, மத்த அகார உகார மகாரங்கள் என்னும் மூன்று மாத்திரைகள் அடங்கியுள்ள அமாத்திரை (கால அளவுக்குள்ளே வராத) சொரூபம். [அர்த்த மாத்திரைன்னு சொல்வது கொஞ்சம் குழப்பறதுதான். அது ஏதோ கால அளவை குறிக்கிறதா தோணும். அப்படி இல்லை. அமாத்திரை என்கிறதே சரியான அர்த்தத்தை கொடுக்கிறது.] மௌனாக்ஷரம் என்றும்; அஜபை என்றும்; ஜபியாமல் ஜபித்தலென்றும்; பஞ்சாக்ஷரம் முதலான மந்திரங்களின் சாரமான அத்வைத மந்திரம் என்றும் கூறப்படும். இந்த எதார்த்த அர்த்தம் சித்திக்கனும்னே ப்ரணவத் தியானம் செய்யப்படுகிறதாம். இந்த ஆத்மாநுசந்தான பக்திரூப தியானத்தின் பரிபாக அவஸ்தையே (state) சமாதி யெனப்பட்டு நிர் அதிசய ஆநந்த மோக்ஷ கதியைக் கொடுக்கும். பெரியோர்களும் ஸ்வாத்மாநுசந்தான ரூப பக்தி யொன்றினாலேயே மோக்ஷமடைய வேண்டும் எனக்கூறியிருக்கின்றனர்.
{ஓங்காரத்தின் முடிவில என்ன இருக்கும்? மௌனமே! நிர்குண பிரமத்தை சப்தத்தால உணர்த்த முடியாது. மௌனமே சுட்டிக்காட்டும்.}
இந்த யதார்த்த அர்த்தம் சித்தித்தல் பொருட்டே ப்ரணவத் தியானம் செய்யப்படுவதாம். இந்த ஆத்மாநுசந்தான பக்திரூப தியானத்தின் பரிபாக அவஸ்தையே (state) சமாதி யெனப்பட்டு நிர் அதிசய ஆநந்த மோக்ஷ கதியைக் கொடுக்கும். பெரியோர்களும் ஸ்வாத்மாநுசந்தான ரூப பக்தி ஒன்றினாலேயே மோக்ஷமடைய வேண்டும் எனக்கூறியிருக்கின்றனர்.

## விசார சங்கிரகம் -26

37.மேற்கூறிய அனுஷ்டாங்களால் ஒருவாறு மனத்திலுள்ள அஞ்ஞான, சந்தேக, விபரீதமாகிய சர்வ பிரதிபந்தங்களும் நசிக்கப்பெற்று சித்தோப சாந்தம் வாய்க்கப்பெற்றாலும் ஓர் சந்தேக மாத்திரமுளது. அதாவது மனதை ஹ்ருதயத்தில்

இருத்திவிட்ட பிற்கு அறிவொன்றுதான் பூரணமாக பிரகாசிக்கிறது. இங்ஙனம் மனமானது ஆன்மாகாரமடைந்து விட்ட பிறகு விசாரிக்கிறவன் யார்? தன்னைத்தானே பூஜிப்பதாக முடிவதால் இது ஆட்டைத்தோளில் போட்டுக்கொண்டு "ஆடெங்கே ஆடெங்கே" என்று தேடிய இடையன் கதையாகவன்றோ முடிகிறது?

ஜீவனே சிவன், சிவனே ஜீவன்; அந்த ஜீவன் சிவனேதான். உமியால் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறவரையில் நெல்லாக இருக்கிறது. உமி நீங்கினால் அரிசியாகிறது. அதைப்போல "கர்ம பாசத்தால் கட்டுண்டிருக்கிற வரையில் ஜீவனாயிருக்கிறான். அஞ்ஞான பாசம் நீங்கினால் சிவனாகிய தேவனாகப் பிரகாசிக்கிறான்" என்ற சுருதியின்படி மனோரூப ஜீவன், தான் கேவலம் ஆத்ம சொரூபமாகவே யிருப்பதை மறந்த மறப்பினாலேயே ஜீவனென்னும் நாமத்தோடு மனோரூபமாய்ப் பந்தப்பட்டிருத்தலால், எப்போதும் தானாகவே யிருக்கும் ஆன்மாவை தேடுவது இடையன் கதையாகவே யிருந்தாலும், தன்னை மறந்த ஜீவன் தன்னை ஆத்மாவென் றோர்காலறிந்து கொண்டே ஆத்மாவாகிய தெய்வமாய்விடுவானா? பூர்வ ஜன்மாந்தர வாசனா ப்ரதிபந்தத்தால் அடிக்கடி தன் ஆத்மாவாக யிருப்பதை மறந்து தேகாதிகள் நானென்று பிரமிப்பனன்றோ? ஒருவன் பெரிய உத்யோகஸ்தனைப் பார்த்துக்கொண்டே தானும் அவ் வுத்தியோகஸ்தனாய் விடுவானா? கிரமமாக அதற்கு முயற்சி செய்தாலன்றோ அவ் வுத்தியோகஸ்தனாதல் கூடும்? அங்ஙனமே தேகாதிகளை நானென்னும் மனோ ரூபமாகப் பந்தப்பட்டிருக்கும் ஜீவனும் கிரமப்படி ஆத்மானுசந்தான மென்ற முயற்சியைச் செய்து மனோநாசம் வாய்க்கப்பெற்றாலன்றோ ஆன்மாவாதல் கூடும்?
தேகாதிகள் நானென்ற இந்த நெடுங்கால 'தேகாதிகள் நானல்ல; ஆன்மாவே நான்' (சிவோகம், சிவோகம்) என்ற நெடுங்கால அனுசந்தானத்தாலேயே நசிக்கப்பெற்று மனோசமன ரூப பரம சீதள சிவ நிலையை அடைதல் கூடுமாகலான், மனமென்னும் அகங்கார ரூப ஜீவனானவன் சர்வ தேவாத்மகமாய் தானிருக்கும் ஆத்ம தேவதையே தான் என்று பலகாலம் தன்னைத்தானே பூஜித்து வாசனைகளே ரூபமாகக் கொண்டிருக்கிற மனமென்னும் பாசத்தை வென்று பரம கைவல்யத்தைப் பெறுதல் வேண்டும். இங்ஙனம் இடைவிடாது செய்யப்படும் இவ்வாத்மானுசந்தானம் மனோ நாசம் செய்து முடிவில் பிணஞ்சுடு தடி போலத் தானும் நீங்கிவிடும்; இதுவே மோக்ஷமாம்.

ஜீவனே சிவன், சிவனே ஜீவன்; அந்த ஜீவன் சிவனேதான். உமியால் கட்டுப்படுத்தப்பட்டு இருக்கிறவரையில் நெல்லாக இருக்கிறது. உமி நீங்கினால் அரிசியாகிறது. அதைப்போல "கர்ம பாசத்தால் கட்டுண்டிருக்கிற வரையில் ஜீவனாயிருக்கிறான். அஞ்ஞான பாசம் நீங்கினால் சிவனாகிய தேவனாகப் பிரகாசிக்கிறான்" என்பது சுருதி. அதன்படி மனோரூப ஜீவன், தான் ஆத்ம சொரூபமாகவே மட்டுமே இருப்பதை மறந்த மறப்பினாலேயேதான் ஜீவன் என்னும் நாமத்தோடு மனோரூபமாய்ப் பந்தப்பட்டு இருக்கிறது. எப்போதும் தானாகவே இருக்கிற ஆன்மாவை தேடுவது இடையன் கதையாகவேதான் இருக்கு. அப்படி இருந்தாலும், தன்னை மறந்த ஜீவன் தன்னை ஆத்மாவென்று ஒரு கால் தியரியா அறிந்து கொண்டால் ஆத்மாவாகிய தெய்வமாய்விடுவானா? அப்படி ஆகாது.
பூர்வ ஜன்மாந்தர வாசனைகள் என்கிற தடைகளால அடிக்கடி தன் ஆத்மாவாக இருப்பதை மறந்து தேகம் முதலானவை நான் என்று பிரமிப்பன் அன்றோ? ஒருவன் பெரிய உத்யோகஸ்தனைப் பார்த்துக்கொண்டே தானும் அந்த உத்தியோகஸ்தனாய் விடுவானா? கிரமமாக அதற்கு முயற்சி செய்தாலன்றோ அந்த உத்தியோகஸ்தன் ஆகலாம்? அதே போல "தேகம் முதலானவைகளே நான்" என்னும் மன வடிவிலே கட்டுப்பட்டிருக்கும் ஜீவனும் கிரமப்படி ஆத்ம அனுசந்தானம் என்ற முயற்சியைச் செய்து மனோநாசம் வாய்க்கப்பெற்றால்தான் ஆன்மாவாதல் கூடும்.
தேகம் முதலானவை நானென்ற இந்த நெடுங்கால 'தேகாதிகள் நானல்ல; ஆன்மாவே நான்' (சிவோகம், சிவோகம்) என்ற நெடுங்கால அனுசந்தானத்தாலேயே நசிக்கப்பெற்று மனோசமன ரூப பரம சீதள சிவ நிலையை அடைதல் கூடும். ஆகலான், மனமென்னும் அகங்கார ரூப ஜீவனானவன், சர்வ தேவ ஆத்மகமாக தானிருக்கும் ஆத்ம தேவதையே தான் என்று பலகாலம் தன்னைத்தானே பூஜிக்க வேண்டும். அப்படி பூஜித்து வாசனைகளே

ரூபமாகக் கொண்டிருக்கிற மனமென்னும் பாசத்தை வென்று பரம கைவல்யத்தைப் பெறுதல் வேண்டும். இங்ஙனம் இடைவிடாது செய்யப்படும் இவ்வாத்மானுசந்தானம் மனோ நாசம் செய்து முடிவில் பிணஞ்சுடு தடி போலத் தானும் நீங்கிவிடும்; இதுவே மோக்ஷமாம்.

## விசார சங்கிரகம் -27

38.ஜீவன் சுபாவத்தில் ஆன்மாவாகவே யிருந்தும் அங்ஙனமாய தனது சுபாவ நிலையினை அறிய வொட்டாமல் மறைப்ப தெது?

தனது ஸ்வபாவ ஸ்திதியினை மறந்த மறதியே வடிவான ஆவரணசக்தியாம்.

ஜீவன் சுபாவத்தில் ஆன்மாவாகவே இருந்தும் அப்படிப்பட்ட தனது சுபாவ நிலையினை அறிய விடாமல் மறைப்பது எது?

தனது ஸ்வபாவ ஸ்திதியினை மறைத்தது எதுவென்றால் மறதியே வடிவான ஆவரணசக்தியாம்.

39.ஜீவன் தன்னை மறந்ததுண்டானால் எல்லோருக்கும் நான் என்ற அனுபவம் தோன்றுவதற்கேது வென்னை?
[ஜீவன் தன்னை மறந்தது உண்டானால் எல்லோருக்கும் நான் என்ற அனுபவம் தோன்றுவதற்கு ஹேது என்ன?]

ஆவரணம் ஜீவனை முற்றும் மறைத்து விடுவதில்லை. நான் ஆன்மாவென்ற ஸ்வபாவத்தை மாத்திரம் மறைத்து தேகம் எனத்தோற்றுவிக்கிறதே யன்றி சத்தாகவும் நித்தியமாகவுள்ள 'நான்' என்ற தனது இருப்பையே தனக்குத் தெரியவொட்டாமல் மறைப்பதில்லை.

ஆவரணம் ஜீவனை முற்றும் மறைத்து விடுவதில்லை. நான் ஆன்மா என்ற ஸ்வபாவத்தை மாத்திரம் மறைத்து தேகம் எனத்தோற்றுவிக்கிறதே அன்றி சத்தாகவும் நித்தியமாகவுள்ள 'நான்' என்ற தனது இருப்பையே தனக்குத் தெரியவொட்டாமல் மறைப்பதில்லை.

40.ஜீவன் முக்த, விதேக முக்தர்களின் இலக்கணங்களெவை?

தேகம் நானல்ல; ஆன்ம சொரூபமாக விளங்கும் ப்ரஹ்மமே நான். பரிபூரண சொரூபியான என்னில் தேகாதி ப்ரபஞ்சங்கள் யாவும் ஆகாய நீலம் போன்று வெறுந்தோற்ற மாத்திரமேயாம் என்னுந்திட நிச்சய முள்ளவனே ஜீவன் முக்த னானாலும் மனோ லயமில்லாத வரையில் ப்ராரப்தவசத்தால் தோற்றும் த்ருஷ்ட விஷயங்களில் ஏக தேசம் துக்கம் தோன்றவும் கூடும். மனச்சலனம் நீங்காமையால் ஆநந்தானுபவ மிருக்காது. நெடுங்கால த்யானத்தால் சூக்ஷ்மமும் நிச்சலனமுமான மனத்திற்கே ஆத்மானுபவம் கூடும். இவ்விதம் சூக்ஷ்மமனதோடு சொரூபாநுபவமு முள்ளவனே ஜீவன் முக்தனெனப்படுகிறான். இந்த ஜீவன் முக்தி ஸ்திதியே நிர்க்குண ப்ரஹ்மமென்றும் துரிய மென்றும் சொல்லப்படுகிறது. இந்த சூக்ஷ்ம மனதும் லயித்து சொரூபாநு பவமு மின்றி ஆநந்தக் கடலில் மூழ்கி ஒன்றுந் தோற்றாமல் அம்மயமாக விருப்பவனே விதேக முக்தனெனப் படுகிறான். இவ்விதேக முக்தி ஸ்திதியே நிர்க்குணாதீத ப்ரஹ்ம மென்றும் துரியாதீத மென்றும் சொல்லப்படுகிறது. இதுவே முடிவு. துக்கசுக தாரதம்மிய பேதத்தால் பிரமவித்து, வரன், வரீயான், வரிஷ்டன் என நான்கு வகையாக கூறும் ஜீவன் முக்த பேதங்கள் பார்க்கும் பர திருஷ்டியை பற்றியன வன்றி ஞானமுக்தி பேத

முண்மையிலில்லை.

தேகம் நான் அல்ல; ஆன்ம சொரூபமாக விளங்கும் ப்ரஹ்மமே நான். ஆகாய நீல நிறம் தோன்றுவது போல, பரிபூரண சொரூபியான என்னில் தேகம் முதலான ப்ரபஞ்சங்கள் யாவும் வெறுந்தோற்றம் மாத்திரமேயாம். இந்த திட நிச்சயம் உள்ளவனே ஜீவன் முக்தன். அப்படி ஆனாலும், மனோ லயம் இல்லாத வரையில் ப்ராரப்த வசத்தால் தோற்றும் த்ருஷ்ட விஷயங்களில் ஒரேயடியாக துக்கம் தோன்றவும் கூடும். மனச்சலனம் நீங்காமையால் ஆநந்த அனுபவம் இருக்காது. நெடுங்கால த்யானத்தால் சூக்ஷ்மமும் நிச்சலனமுமான மனத்திற்கே ஆத்மானுபவம் வரக் கூடும். இவ்விதம் சூக்ஷ்ம மனதோடு சொரூப அநுபவமும் உள்ளவனே ஜீவன் முக்தன் எனப்படுகிறான். இந்த ஜீவன் முக்தி ஸ்திதியே நிர்க்குண ப்ரஹ்மமென்றும் துரிய மென்றும் சொல்லப்படுகிறது. இந்த சூக்ஷ்ம மனதும் லயித்து சொரூப அநுபவமும் இன்றி ஆநந்தக் கடலில் மூழ்கி ஒன்றுந் தோற்றம் இல்லாமல் அந்த மயமாக இருப்பவனே விதேக முக்தன் எனப் படுகிறான். இந்த விதேக முக்தி ஸ்திதியே நிர்க்குணாதீத ப்ரஹ்மம் என்றும் துரியாதீதம் என்றும் சொல்லப்படுகிறது. இதுவே முடிவு. துக்க சுக தார தம்மிய பேதத்தால் பிரமவித்து, வரன், வரீயான், வரிஷ்டன் என நான்கு வகையாக கூறும் ஜீவன் முக்த பேதங்கள் வெளியிலிருந்து பார்ப்போரின் கண்ணோட்டத்தை பற்றியன அன்றி ஞான முக்தி பேதம் உண்மையில் இல்லை.

வாழ்த்து
மாசிவன்றா னேயாய் மனிதனுமாய் வாழ்ரமண
தேசிகன்றாள் வாழ்க தினம்.

மாசிவன் தானேயாய் மனிதனுமாய் வாழ் ரமண
தேசிகன் தாள் வாழ்க தினம்.

ஓம்
சாந்தி சாந்தி சாந்தி:
சுபம்.